# களத்தில்

தமது இனிய உயிர் அர்ப்பணிப்பால் தனியரசிற்கு வித்திட்டு உரமிட்டவர்கள் மாவீரர்கள். மாவீரர்களின் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர்

(18.11. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தி நாள் (174) அன்பளிப்பு 60 p


# பேசுவது சிவில் நிர்வாகம் நடத்துவது இராணுவச் சர்வாதிகாரம்

## சந்திரிகா வடக்கு கிழக்கின் சிறிலங்கா ஆளுநராக யாழ்குடா இராணுவத் தளபதியை நியமித்தார்

## சிறிலங்கா அரசாங்கம் சொல்வது ஒன்று செய்வது வேறொன்று - முன்னாள் ஆளுநர்

## வடக்கு கிழக்கின் அபிவிருத்தி நிவாரணம் என்பது வெறும் பெயரளவு பேச்சேயென்கிறார்

தம்மால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் தோற்றுவிக்கப்பட்டு விட்டதாக உலகெல்லாம் கதையளக்கும் சந்திரிகா வடக்கு கிழக்கு பகுதிகளின் சிறிலங்கா ஆளுநராக கடமையாற்றிய காமினி பொன்சேகா தனது பதவியை இராஜினாமாச் செய்ததினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு யாழ்குடா நாட்டு இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் அசோக்கா ஜெயவர்த்தனாவை நியமித்துள்ளார்.

இவர் மிகவும் கடுமையான இராணுவத் தளபதியெனப் பெயர் எடுத்தவர் என இந் நியமனம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை, இவர் சிங்களக்குடியேற்றங்களை தமிழ்ப்பகுதிகளில் ஏற்படுத்தும் செயற்பாட்டில் முன்னர் பங்குபற்றியவர் என்றும் எடுத்து விளக்கியுள்ளது.

செம்மணியில் எழுநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள உயிருடனும் கொன்றும் சிறிலங்கா இராணுவத்தால் புதைக்கப்பட்ட மரணப் புதைகுழிகள் விவகாரம் அதில் பங்கு பற்றிய சிங்கள இராணுவத்தினரால் கிரிசாந்தி [illegible] வெளியிடப்பட்டும் இதுவரை அது குறித்து எதுவித நீதி விசாரணைகளையும் மேற் கொள்ளாது அப்புதைகுழிகள் குறித்த தடயங்கள் அழிக்கப்படுவதற்கு

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## உலகின் மடியில் எத்தனையோ அதிசயங்கள்! தமிழன்னை மடியிலோ ஒரேயொரு அதிசயம் நான்!



மின்னல் வெடித்த தெம் விண்ணில்
மானம் தளிர்த்த தெம் மண்ணில்
முன்னர் தமிழர் நிலை யெண்ணி
முகிழ்ந்தான் தாயகத்தின் கண்ணில்

# யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணி

## இராணுவச் சித்திரவதைகளுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்தனர்

நடுப்புக்காவல் கைதிகள் சித்திரவதைக் கொலைக்கு கண்டனம்

கைதுசெய்பவர்களின் விபரங்களை வெளியிடக் கோரிக்கை

யாழ்குடாநாட்டில் மக்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அவர்களை சித்திரவதை செய்து கொன்று வருவது குறித்து பொதுமக்கள யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர்.

அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்திய இக்கண்டன ஊர்வலத்தின் இறுதியில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இம் மகஜரில் தடுப்புக்காவலில் வைத்து தமிழ்ப் பொது மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்படுவது குறித்து விரிவாக குறிப்பிட்டதும் அல்லாமல் தடுப்புக்காவலில் வைக்கப்படும் விபரங்களை உடன் வெளியிட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு விடுதலை அடைவோர் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படும் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சென்ற மாதத்தில் குருநகரிலும், நாயன்மார்கட்டிலும் கைது செய்யப்பட்ட இரு தமிழ் பொது மக்கள் தடுப்புக் காவலில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்டமை தமிழ்ப் பொது மக்களிடை பலத்த அச்சத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் மறியல் போராட்டம்

இதற்கிடை யாழ்ப்பல்கலைக் கழக மாணவிகள் விடுதிக்குள் வாசல் கதவை உடைத்து அத்துமீறி பிரவேசிக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மாணவிகள் போட்ட கூச்சலினால் அயலவர்கள் உதவிக்கு விரைந்ததை அடுத்து தம் முயற்சியைக் கைவிட்டு விட்டு கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொண்டு வெளியேறின சம்பவம் பல்கலைக்கழக மாணவர்கள் இடை பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயத்தை சிறிலங்கா இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது படையினர் பாதுகாப்பு கடமைகளில் தீவிரமாக உள்ளனர் எனவும் அதன் ஒரு அங்கமே அது எனவும் கூறி

தொடர்ச்சி 15 ம் பக்கம்...

# சிறிலங்கா மீது ஐ.எம்.எவ். கண்டனம்

சிறிலங்காவின் பாதுகாப்பு வரி ஒரு சதவீதத்தால் அதிகரிப்பு


இராணுவ ஒதுக்கீடு குறைக்கப்படாமைக்கு ஐ.எம்.எவ் கண்டனம்

சிறிலங்காவின் பாதுகாப்பு வரி மேலும் ஒரு சதவீதத்தால் 99ம் ஆண்டுக்கான சிறிலங்கா வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ் வரியினை தமிழ் மக்களும் செலுத்த வேண்டி இருப்பதால் தமிழ் மக்கள் தங்களை இனஅழிப்பு செய்வதற்கு தாங்களே சிறிலங்காவுக்கு நிதியளிக்கும் அவலநிலையில் உள்ளனர். பாதுகாப்புச் செலவீனங்களுக்கான தொகையை சிறிலங்கா மிகவும் அதிகரித்துள்ளமை சிறிலங்கா தமிழ் மக்கள் மீதான மற்றொரு பாரிய யுத்தத்தை நவீன ஆயுத உதவிகளுடன் நடத்துவதற்குத்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தரைமட்டமாக்குகிறோம் என்னும் பேரினவாத உணர்வுடன் மாவீரர் துயிலகங்களைக் கூட மனித நாகரீகமற்ற முறையில்— மனித குலத்திற்கே அவமானகரமான முறையில்— புல்டோசர் கொண்டு தகர்த்து எறிந்தார்கள். இந்த மனிதகுல வரலாற்றுக்கே இழுக்கைத் தேடி தந்த சிங்கள அரசாங்கத்தின் ஈனச் செயலால் தமிழர்களது நெஞ்சங்கள் தாங்கொணா வேதனையடைந்தது மட்டுமல்லாமல் இறந்தவர்களின் நினைவைக் கூட அனுமதிக்க மறுக்கும் சிங்கள அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாக கூறுவதின் போலித்தனத்தையும் அவர்களுக்கு மீண்டும் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளது. சந்திரிகாவின் சிங்களப் படைகளால் மாவீரர் துயிலகங்கள் என்னும் தமிழர் புனித சின்னங்களைத் தான் தீண்ட முடிந்ததே தவிர தமிழர் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்து நிற்கும் மாவீரர்களின் நினைவை — அந்த நினைவு தரும் செயற்பாட்டுத்திறனை அழிக்க முடியவில்லை. அதனால்தான், முல்லைத்தீவு முதல் கிளிநொச்சி வரை சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் விடுதலைத் தீயின் வெம்மையை நன்கு உணர்ந்து தவிக்கின்றார்கள். தமிழர் நாட்டுக்குள் கல்லறைகளை உடைத்தெறியப் புறப்பட்ட அவர்கள் தமிழீழ மண்ணைத் தமக்கு



கல்லறையாக மாற்றிக் கொண்டு நிற்கின்றனர்.

தமிழர்கள் யாரையும் தேடிப்போய்த் தாக்கவில்லை. பேரினவாத வெறி தந்த போதையில் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க வந்து தங்கள் அழிவைத் தாங்களே நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றன சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள். மாவீரர் திருமேனி தூவுண்ட தமிழர் தாயகம் விடுதலைத் தணலாகி நிற்கின்ற உண்மை புரியாது தீயுடன் விளையாடி அதன் பலனை அனுபவித்து நிற்கின்றது சந்திரிகா அரசாங்கம். மாவீரர் துயிலகங்களை மதியாது மனித நேயமற்ற தன் சுயத்தை உலகுக்கு தெளிவு படுத்திய சந்திரிகா, மனித நேயமற்ற முறையில் தனது சிங்கள இளைஞர்களுக்கும் போர் வெறி ஊட்டி களப்பலிகளாக அனுப்பிக் கொண்டு வாய் மொழி வீரம் பேசி தன் அரசியல் வியாபாரத்தை வெற்றிகரமாக நடாத்திக் கொண்டிருக்கின்றார். ஆனால், சந்திரிகாவின் ஆக்கிரமிப்புப் படைகளினால் எங்கள் தேசமும் எங்கள் மக்களும் அழிக்கப்படுவதை தடுக்கும் ஆன்மீக சக்தியாக மாவீரர்களும், அந்த

மாவீரர் உணர்வுகளால் உந்தப்பட்டு அவர் பணி தொடரும் ஒவ்வொரு தமிழீழ மகளும் மகனும் திகழ்கின்றனர்.

இதனால், கல்லறையை இடித்தால் மாவீரர் நினைவையழித்து விடலாம் எனப் புகுந்த சிங்களப் படைகளுக்கு தமிழீழத் தாயகத்தின் ஒவ்வொரு கல்லும் கல்லறையாகி கொண்டிருக்கிறது. சுற்றிலும் பயங்கர நவீன ஆயுதங்கள் ஏந்திய படைகளை நிறுத்தி தமிழர் தாயகத்தை அடிமை கொள்ளலாம் என நினைத்த சந்திரிகா அரசாங்கத்தால் யாழ்குடா நாடு உட்பட தமிழர் தாயகமெங்கும் பலத்த ஆளணி — ஆயுதபல இழப்புக்கள் சாதாரண சம்பவமாகி உள்ளது. மாவீரர்கள் உறங்கவில்லை உறைகின்றார்கள் என்பதன் பொருள் சிங்களப் படைக்கு இப்பொழுது நன்கு புலனாகியுள்ளது.

ஆனாலும், சந்திரிகாவைப் பொறுத்தவரை — தனது சிங்களப் படைக்கு ஏற்படும் பேரழிவுகளை விட நாளும் பொழுதும் தன் படைகளால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படும் தமிழர்களின் மனித வேதனைகள் அதிக மன மகிழ்ச்சியை — அவருக்கு கொடுக்கின்றது. காரணம், தமிழர்களது உடல், உயிர், உட்கட்டுமான அழிவுகள் அவர்களது தேசிய எதிர்ப்பு வலிமையை அழிக்கும்— அதன் மூலம் தனது இனஅழிப்பு அரசியல் செயற்திட்டங்களை அவர்கள் மேல்

திணித்து அவர்களது அரசியல் பணிவை — அவற்றுக்கு பலவந்தமான முறைகளில் பெற்று விடலாம் என சந்திரிகாவும் சிங்களப் பேரினவாத சக்திகளும் சிந்திக்கின்றன. இவர்களது இந்த சிந்தனையின் தோல்வியை எதிர்வு கூறும் சக்தியாக மாவீரர்கள் திகழ்கின்றனர்.

தமிழீழ மக்கள் தமது உயிரிலும் மேலாக தமிழீழத் தேச விடுதலையைக் கருதுகின்றனர்.

அவ்வாறு கருதும் அளவுக்குச் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழ் மக்களின் உயிருக்கும் உடலுக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பின்மையை தோற்றுவித்துள்ளதும் அல்லாமல் அவர்களது நாளாந்த வாழும் உரிமைகள் அனைத்தையும் மறுத்து அவர்களது வரலாற்றுத் தாயகத்தையும் அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்தவும் ஆக்கிரமிக்கவும் செய்கிறது. இத்தகைய நாளாந்த வாழ்வின் சம்பவங்களே தமிழீழ மக்களை தமது வாழும் உரிமைக்காகப் போராட வைத்துள்ளது.

இந்த அடக்குமுறைகளை — அரசபயங்கரவாதத்தை இனங்கண்டு தங்கள் சந்ததி வாழப் போராடி தம்மின்னுயிர் ஈந்து சரித்திரமாகி மாவீரர்கள் என வணங்கப் பெறும் எம் சகோதரர் நினைவாக நாம்

புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி அவர்களின் புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச் சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமென இச்செயலைச் சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச் செயலுக்குச் சிங்கள பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் ( 1997 மாவீரர் நாள் உரையில் )

அவர்களுக்கு வீரவணக்க மரியாதை செலுத்தினால் மட்டும் போதாது. அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதில் நமது பங்கென்ன என்பதை நாமாகவே தெரிந்து அதனை நிறைவேற்றுவதே நாம் அவர்க்குச் செய்யக் கூடிய [illegible] வீரவணக்கமாக அமையும். தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஓரணியாய்த் தமிழீழத் தேசத்தை மீட்க உழைப்பதே மாவீரர்களுக்கு நாம் செய்யக் கூடிய— செய்ய வேண்டிய ஒரே வீரவணக்கமாகும். எமது இந்தச் செயற்பாடுகளால் மாவீரர்கள் மட்டுமல்லாமல் அம்மாவீரர்களை எமக்காகத் தேசக் காணிக்கையாக்கி விட்டு அவர்கள் நினைவால் வாடுகின்ற ஒவ்வொருவருக்கும் நாம் அளிக்கும் ஆறுதலாகவும் அமையும்.

அது மட்டுமல்ல மாவீரர்கள் தங்கள் நலனுக்காக அல்ல எங்கள் நலனுக்காக எம் சந்ததியின் நலனுக்காக உழைத்த உத்தமர்கள். அவர்களது இலட்சியம் நிறைவேறும் பொழுது நாமும் நமது சந்ததியும் தான் நலன் பெறுபவர்களாகின்றோம். இதனை உணர்ந்து மாவீரர்களுக்கு நாம் அளிக்கும் மரியாதை— அவர்களது கனவை நனவாக்க நாம் எடுக்கும் முயற்சிகள்— அதில் நாம் எதிர்கொள்ளக் கூடிய கஷ்ட துன்பங்கள்— எல்லாமே எமது நல்வாழ்வுக்காக நாமே செய்யும் செயல்கள் என்பதை உணர்ந்து நாம் உலகில் எங்கு வாழ்ந்தால் என்ன மாவீரர்கள் பணி தொடர இலட்சியம் நிறைவேற இயன்றது அனைத்தும் செய்திட இம்மாவீரர்கள் தினத்தில் — எம் தேசத்தின் தேசியநாளில் உறுதி பூணுவோமாக.

ஆ.பத்திமாகரன்

## இறப்பற்றோர்...

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன.
முறிக்க முறிக்க
முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிலப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன. . .

அடிபட்ட,
சுவாசப் பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அழிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக
வெளியேற்றுகின்றன.

இறந்துபோனான்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே?
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும்வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பே யில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது.

- கப்டன் கஸ்தூரி

# பங்களிப்பு.....

பந்தடியை பார்த்துவிட்டு விமர்சனம் சொல்லுகிற மாதிரி கதையாதீங்கோ.. விடுதலைக்கு வெளியில நிண்டு வேடிக்கை பார்ப்பதை விட்டுவிட்டு தாய்மண்ணை மீட்கிறதுக்கு ஏதாவது உருப்படியாய் எதையாவது செய்யுங்கோ பாப்பம்... வீடு தேடி வந்தவையிட்ட விதண்டாவாதம் செய்தியள். இப்ப அவை வாறதில்லை. இவ்வளவு உழைக்கிறியள். வட்டிக்கு கடன் கொடுக்கிறியள். விடுதலைக்கு எண்டு சொல்லி ஏதாவது கொடுத்தா என்ன..."

"வீட்டை வந்தால் எல்லோ கொடுக்கிறது.."

"வீட்ட வந்தாத்தானோ கொடுக்கிறது.. எத்தன தரம் வந்தவியள்... நீங்கதான் அங்கை இங்கை எண்டு அலைக்கழிச்சனியள்... ஏன் நீங்கள் கொண்டுபோய்க் கொடுத்தால் என்ன குறைஞ்சா போடுவியள்.."

"அப்ப பயங்கரவாதத்திற்கு என்னை பங்களிக்கச் சொல்லிறியா...?"

"அதுங்க பயங்கரவாதம்... எங்கட உயிர நாங்கள் பாதுகாக்கிறது பயங்கரவாதமா... ஆயுதத்தை தூக்க வைச்சது யாருங்க...? நீங்க யோசிச்சுத்தான் கதைக்கிறியளா...? ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்தால் நாங்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது என்று தலைவர் ஒரு புத்தகத்தில பௌத்த மதத்தின்மீது மதிப்பளித்து கூறியதை வாசித்துப் பார்த்தியளா..? இப்ப சொல்லுங்கோ எங்கட பெடியள ஆயுதம் தூக்க வைத்தது யார்...?"

சளார்...

"பொத்தடி வாயை..! புரிசனை எதிர்த்தா கதைக்கிறாய்...!"

அவள் கன்னம் சிவந்தது. அன்றிலிருந்து அவள் அவனுடன் விடுதலை... போராட்டம் என்று எதுவும் தப்பித்தவறி கதைப்பதேயில்லை. அப்படி கதைக்க முற்படும்போதெல்லாம் தனது கன்னத்தை தடவிப்பார்த்து ஞாபகப் படுத்திக் கொள்ளுவாள்.

சூரிய உதயத்தைத் தரிசிக்க பார்த்துக்



கொண்டிருந்த அந்த விமானம், அதனைக் காணாமலே கட்டுநாயக்கா விமான நிலையத்தை விட்டுக் கிளம்பியது. விமானத்துக்குள் ஒருவித அமைதி. எல்லோரும் அரைகுறை நித்திரையில் இருக்கையில் இருந்தவாறே திரும்பித் திரும்பி படுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் ராஜா எதையோ ஆழமாகச் சிந்தித்தபடியே அங்கலாய்த்துக் கொண்டிருந்தான்.

அவனது எண்ணம் மனதை உறுத்துகிறது. அடிக்கடி தன்னை மறந்தநிலையில் 'சீச்சீ..' எனச் சலித்துக் கொண்ட வார்த்தைகள் அவளுக்கு கேட்கிறது.

"என்னங்க.. என்ன யோசிக்கிறியள்..?"

பதில்.. இல்லை. அவனது கண்களில் லேசான கண்ணீர் கசிவதற்காக காத்துக்கொண்டிருந்தது.

அவனது தோளைப் பிடித்து உலுக்கினாள்.

"என்னங்க ... ஏன் யோசிக்கிறியள்... சொல்லுங்கோ.."

"ராணி.. நீ என்னை மன்னித்துவிடு...!"

"ஏன் நான்.. ஏன் மன்னிக்க வேணும்."

அவனது கரங்கள் அவளது கன்னத்தைச் கட்டிக் காட்டித் தடவியதும்...

"அது எப்பவோ நடந்த விசயம்.. அதைவிட்டுப்போய்.."

"இல்லை.. அது எனக்குத் தப்பு என்று இப்பத்தான் புரிகிறது. இந்த ஆமிக்காரன் யாழ்ப்பாணம் வருவதற்கும் எங்கட மண் பறிபோவதற்கும் நானும் காரணமாக இருந்திருக்கிறன். என்னைப் போன்றவர்களும் காரணமாக இருந்திருக்கிறார்கள். எங்களின் கையை நாங்களே பலப்படுத்தத் தவறிவிட்டோம். ராணி... நீ என்னை மன்னித்துவிடு... நான் செய்தது பிழை எண்டு இப்ப எனக்கு விளங்குது..."

"ஆம்பிளை நீங்கள் அழக்கூடாது."

அவள் அவனது கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

அவன் தழுதழுத்த வார்த்தைகளுக்கிடையே சற்று ஆத்திரமாகக் கூறினான்...

"ஆம்பிளை அழக்கூடாது... ஆம்பிளை அடுக்களைக்கு போகக்கூடாது என்றெல்லாம் சொல்லி ஏன் உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளுகிறீங்கள். அன்றைக்கு உனக்குக் கன்னத்தில அடிச்சு உன்ர கருத்தை கூறவிடாமல் தடுத்தது என்ர ஆணாதிக்கம்தான். உன்மாதிரி பெண்களின்ர உரிமை மறுக்கப்படுகிறது என்பதை விட உங்கட உரிமைகளை நீங்க கையில எடுக்கவில்லை என்கிறதுதான் உண்மை."

"அத்தான்..." அவள் உச்சியிலிருந்து ஒரு உணர்வு—மகிழ்வு. அவனது கன்னம் நோக்கி தன் தலை சாய்த்தாள். இன்றுதான் அவளுக்கு அந்த சுகமான நாள்...

"ராணி... எனக்கு மன்னிப்பேயில்லையா..."

"மலரப்போகும் தமிழீழம் எல்லோருக்கும் ஒன்றுதானுங்க. அது பங்களித்தவருக்கு வேறாகவும் பங்களிக்காதவருக்கு வேறாகவும் மலரப்போவதில்லை. நாம் பதில் சொல்ல வேண்டியது எமது மனச்சாட்சிக்கு மட்டும்தான்" ❁

---

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மாணவர் சமுதாயத்துக்கு விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் இது

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## கிடைப்பது வெற்றிதான், வேறொன்றுமில்லை!

*மாணவர் சக்தி! அது மகத்தான சக்தி!*

*சுழன்றடிக்கும் புயல், வெடித்துக் கிளம்பும் பூகம்பம், குமுறிப் பிளந்து நெருப்பெரியும் எரிமலை—இவையெல்லாம் கூட மாணவர் சக்திக்கு முன்னால் பொடிப்பொடியாகும்...!*

*இந்த வல்லமையைக் கொண்ட மாணவர் சமூகம் யாழ் மாவட்டத்திலே மட்டும் தன்னுடைய சக்தியை இழந்துவிட்டதா என்ன?*

*இல்லை! இல்லை! இல்லவே இல்லை!*

*கருமேகத்துள் மறைந்துள்ள நிலாபோல், யாழ் மாவட்டத்தில் இன்று சூழ்ந்துள்ள அச்சமூட்டத்திற்குள் மாணவர் சமூகம். அங்கு பீதி கொண்டு தியங்கிக்கிடக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்!*

*அச்சமூட்டத்தை அகற்றி, விலக்கி*

*மாணவர் சமூகமங்கு விழித்து எழட்டும்—*

*எதிரியின் முற்றுகை பொடிப்பொடியாகும்.*

*எல்லா நன்மையும் வந்தேசேரும் படிப்படியாக...!*

*யாழ் மாவட்டத்தில் இறுக்கிப்பிடிக்குள் அகப்பட்டுள்ள எம்மினிய மாணவர் செல்வங்களே!*

*எதிர்கால நல்ல எங்களின் நம்பிக்கைச் சொத்துக்களே!*

*நீங்கள் கற்கச் செல்லும் கல்வி நிலையங்கள் உட்பட உங்கள் வாழ்புலச் சூழல்களைக் கவனித்துப் பாருங்கள்...*

*சந்திகள், வீதிகள், சந்தைகள், கடைகள், ஒழுங்கைகள், பாடசாலைகள் போன்ற எல்லா இடங்களிலுமே சிறிலங்கா இராணுவம் அடிக்கடி வந்து போகிறது நிலைத்தும் நிற்கிறது. வீடுகளுக்கும் வருகிறது.*

*இந்த இடங்களிலெல்லாம் பலரை பிடித்தும், இழுத்தும் செல்கிறது.*

*அப்படிக் கூட்டிச் செல்லப்பட்டோரில் அதிகமானோர் எங்கேயென்று தெரியவில்லை!*

*அவர்கள் காணாதோர் பட்டியலில்.*

*அவர்களில் அதிகமானோர்—மாணவர்கள்தானே!*

*மாணவச் செல்வங்களே! இன்னும் பாருங்கள்!*

*நீங்கள் படிப்பதற்காகப் பிரயாணஞ் செய்யும்போது எத்தனை இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினால் மறிக்கப்படுகிறீர்கள்?!*

எங்களின் மொழி தெரியாத அன்னிய இராணுவம் உங்களை எத்தனை பாடுபடுத்துகிறது?!

நீங்கள் படிக்கச் செல்லும் மாணவர் என்பதை அறிந்தும் உங்களைத் தொல்லைப்படுத்துகிறது. நீங்கள் எதுவுமே செய்ய முடியாது. என்ன செய்வது என்று சமாளித்துக் கொள்கிறீர்கள். இந்த வேதனைகளையும் சமாளிப்புக்களையும் எத்தனை நாட்களுக்குப் பொறுப்பது?!

இந்த அடாவடித்தனச் சோதனைகளும் மறிப்புகளும் எப்போது முடியப்போகிறது

மாணவச் செல்வங்களே இவை மட்டுமா?!

எத்தனை மாணவ, மாணவிகள் கொல்லப்பட்டு விட்டார்கள்?

உங்கள் மாணவர் சமூகத்தில் ஓர் அங்கமாக இருந்த மாணவனை, அல்லது மாணவியை இராணுவம் தன்னிச்சைக்கேற்றவாறு நடத்தி, நசுக்கி அழித்துத் துவம்சம் செய்ய நீங்கள் பொறுத்துக் கொண்டிருப்பதா? உங்களால் எதுவும் முடியாது என எண்ணி உங்களில் பலரை இராணுவம் பலியெடுத்துள்ளது. இராணுவ வாகனத்தினால் மோதப்பட்டு ஒரு மாணவி பலியெடுக்கப்பட்டாள்! அவளின் சாவீடிற்குச் சென்று வந்த இன்னொரு மாணவி, இராணுவத்தினால் இதயம் பிடுங்கி இரையெடுக்கப்பட்டாள். அம்மாணவியைத் தேடிச் சென்ற குடும்பத்தினரும் உறவினரும் கோரப்பலி எடுக்கப்பட்டனர்.

மாணவச் செல்வங்களே!

வாகனத்தினால் மோதிப்பலி எடுக்கப்பட்ட மாணவியின் வழக்கு, சாட்சிகள் இல்லையென்று தள்ளப்பட்டு விட்டது.

இவை மட்டுமா இன்னும் இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் மாணவர்களுக்கு எதிராக நடாத்தப்படுகின்றன.

மாணவச் செல்வங்களே!

உங்கள் மகத்தான சக்தியை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதல்லவா?

தோளை நிமிர்த்துங்கள். துணிவுடன் புறப்படுங்கள். ஆயுதங்கள் ஏந்துங்கள்.

வரலாறும் காலமும் இதை உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறது.

அநீதியை அழிக்காது எவ்வாறு நீதியைக் காப்பாற்ற முடியும்.

நீங்கள் புறப்படுங்கள். உங்கள் சமூகத்தை வதைக்கும் கொலைப்பயமோ யாவும் இல்லாது போகும்.

எதிரியின் இறுக்கிப்பிடிப்புக்குள் அகப்பட்டுள்ள மக்களை மீட்க, உங்கள் மீது வீழ்ந்த எல்லாத் தடைகளையும் தொல்லைகளையும் இல்லாது செய்ய.

சமூகமான, சுபீட்சமான வாழ்விலும் விடுதலையும் கிடைக்க— உண்மையான சுதந்திரம் மலர— புலியணி சேர்ந்து பலம் சேருங்கள்.

பலம் கொள்ளுங்கள்.

கிடைப்பது வெற்றிதான் வேறொன்றுமில்லை.

'ஓங்குக மாணவர் கரங்கள்! வெல்க எமது உரிமைப்போர்'

*மாணவர் ஒருங்கிணைப்புக் குழு — யாழ் மாவட்டம்*

# வரலாறு சொல்லும் பாடம்

– தென்னாபிரிக்கா –

சுதந்திரத்திற்காகப் போரிட்ட – போரிட்டுக் கொண்டிருக்கிற நாடுகளிலிருந்து தென்னாபிரிக்காவின் போராட்டம் பெரும் வேறுபாடுகளைக்கொண்டது. அநேக நாடுகள் பெரும்பான்மை இனத்திடமிருந்து நசிபடுகின்ற சிறுபான்மை இனம் தமது இறைமை வேண்டி அகிம்சைவழியிலோ ஆயுத வழியிலோ சுதந்திரப்போரை முன்னெடுத்தன. தென்னாபிரிக்காவோ முற்றிலும் வேறுவிதமாக இருந்தது. தென்னாபிரிக்காவின் மொத்தச் சனத்தொகை 2கோடியே 40 இலட்சம். இதில் ஏறக்குறைய 2கோடி மக்கள் கறுப்பு இனத்தவர்கள். மிகுதி 40 இலட்சம் மக்கள் வெள்ளையர்களும் அவர்களை அண்டியிருக்கும் சிறுபான்மையினங்களுமாகும். இந்தச் சிறுபான்மை வெள்ளையர்களிடமே ஆட்சி அதிகாரம் இருந்தது. 300 வருடங்களாக இந்த அநீதி ஆட்சி நீண்டு கொண்டிருந்தது. உலகில் எங்கும் இல்லாத ஒரு புதிய முறை அதாவது வெவ்வேறு இனத்தவருக்கு வெவ்வேறு சட்டங்கள் என்ற முறை நடைமுறையில் இருந்து வந்தது.

கறுப்பு இனத்தவர்கள் வெள்ளையர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டனர். வெள்ளையர்களுக்கு வேறாகவும் கறுப்பு இனத்தவருக்கு வேறாகவும் உள்ள பிரதேசங்களைவிட்டு கறுப்பு இனத்தவர் வெள்ளையர் பிரதேசங்களுக்குள் நுழைந்தால் கறுப்பு இனத்தவர் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டனர். தமக்கு விளைவிக்கப்படும் அநீதிகளை எதிர்த்து கறுப்பு இனத்தவர் குரல்கொடுக்கவோ சட்ட நடவடிக்கை எடுக்கவோ தென்னாபிரிக்க அரசியல் யாப்பில் இடமில்லை. போக்குவரத்து பஸ்ஸில், கல்வி கற்கும் பாடசாலையில் தேவாலயங்களில் எங்கும் எதிலும் இன ஒதுக்கம் விசுவரூபம் எடுத்து நின்றது.

இனஒதுக்கலுக்கு எதிராக கறுப்பு இனத்தவர் குரல் எழுப்பிய போதெல்லாம் வெள்ளையர் அரசு மிகக்கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தென்னாபிரிக்காவின் உள்நாட்டு விவகாரம் வெளிஅரங்கிற்கு வந்தபோது ஆபிரிக்க நாடுகளும் ஆசியாவில் ஒருசில நாடுகளும் கறுப்பு இன மக்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்தன. தென்னாபிரிக்க வெள்ளை அரசு அசைந்து கொடுக்கவில்லை. கறுப்பின மக்களுக்கு அரசியல் அந்தஸ்த்து கொடுப்பதாகக் கூறி 13 நிலப்பிரதேசங்களை அவர்களுக்கென ஒதுக்கியது. அப்படி ஒதுக்கப்பட்ட பகுதியை (பண்டுஸ்த்தான்) எனக் குறிப்பிட்டது. இந்தப் பகுதிகள் நாளடைவில் நீக்கிறோ மக்கள் விரும்பும் வண்ணம் சுயாட்சி உள்ள பிரதேசங்களாக மாறும் என தென்னாபிரிக்க அரசு சொல்லிக் கொண்டது. இந்தப் பண்டுஸ்த்தான் பிரதேசம் எந்த ஒரு இயற்கை வளமற்ற வரண்ட பிரதேசமாகும். கறுப்பின மக்களோ தமது பகுதியில் வாழவழியற்று உழைப்புத் தேடி வெள்ளையர் வாழும் பகுதிகளுக்குப் போகும்போது அவர்கள் அந்நியர்

> கறுப்பின மக்கள் சொல்ல முடியாத சித்திரவதைகளைக் வருடக்கணக்காக தனிமனித மரணங்களையும் சந்தித்தபோதும் தம் முடிவில் உறுதி குலையாது பசப்பு வார்த்தைகளுக்கு மயங்காது போரிட்டபடியால் இன்று சுதந்திர மனிதர்களாக உலக அரங்கில் வலம் வருகிறார்கள்.

களாக தீண்டப்படாதவர்களாக கருதப்பட்டு தம்மை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களை மிகப்பாதுகாப்பாக வைத்திருக்க



வேண்டும். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வெள்ளை அரசும் பாதுகாப்பு படையினரும் சோதனை



யில் ஈடுபடலாம். அந்தச் சோதனையில் ஏதாவது சந்தேகம் ஏற்படுமானால் கறுப்பு இனத்தவர் ஏதாவது ஒரு சிறைக்கூடத்தில் கணக்கற்ற நாள் வாடவேண்டி வரும். அவர் எங்கே இருக்கிறார் என்பது அவரைச் சார்ந்தவர்களுக்கு தெரியவராது. சொந்த நாட்டிலியே தான் நடமாட அனுமதி பெறவேண்டும். இது தென்னாபிரிக்காவில மாத்திரமல்ல தமிழீழ மண்ணிலும் சட்ட ரீதியாக நாளாந்தம் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஐக்கிய இலங்கை என்று சொல்லும் சிங்கள அரசு கொழும்பில் தமிழ் மக்களுக்கு செய்யும் சோதனைகளும் சிறை அடைப்புகளும் கொஞ்சமல்ல.

கொழும்பு வேண்டாம் பாரம்பரிய தமிழ் மண்ணான யாழ்குடாநாட்டில் தமிழர் நடமாட முடியாதுள்ளது. வியர்வை சிந்தி உழைத்துக்கட்டிய சொந்த வீட்டுக்குப் போக முடியாமல் இராணுவம் சொல்லும் இடத்தில் இருக்க வேண்டிய நிலை உள்ளது. தென்னாபிரிக்க இன ஒதுக்கல் [illegible] இருந்த சில பிரிவுகள் [illegible] வழியில் எதிர்த்த கறுப்பு இனத்தவருக்கு வெள்ளையர் சித்திரவதைகளையும் சிறைக் கூடங்களையும் காட்டினர். இதனால் கறுப்பு இனத்தவர் ஆயுதம் பக்கம் தம் கவனத்தைத் திருப்பினர். வெறிபிடித்த ஆயுதப்படையினர் தாக்கலுக்கு உள்ளாகினர். இதைச் சாட்டாக வைத்து ஆயுதப்படையினர் கறுப்பின மக்களின்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பலரைக் கொன்றனர். வெள்ளையர் அரசுக்கெதிரான கிளர்ச்சி வேகமாக வளரத்தொடங்கி ஏ.என்.சி. என்று சொல்லப்படுகின்ற ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் என்ற பேரியக்கமாக மாறியது. அதன் தலைவராக நெல்சன் மண்டேலா இருந்து வழிநடத்தினார். இன ஒதுக்கலை எதிர்த்து கறுப்பின மக்கள் சுபீட்சமான வாழ்வினை அமைத்துக் கொள்ளப்போவதாக திடசங்கற்பம் எடுத்துக்கொண்டனர். தென்னாபிரிக்க கறுப்பினத்தவரின் சுதந்திரமே தமது வாழ்க்கையாகக் கொண்டு நெல்சன் மண்டேலா தமது நடவடிக்கைகளை மேற்கொண்டார். வெள்ளையர் அரசு அவருக்கெதிரான சட்டநடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது. சில அரசியல் விமர்சகர்கள் நெல்சன் மண்டேலாவை மகாத்மா காந்திக்கு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. ஆனால் நெல்சன் மண்டேலாவை பொறுத்தமட்டில் வெள்ளையர் அரசுக்கு முன்னால் ஜனநாயக வழிகள் எடுபடாது என நன்கு அறிந்து கொண்டார். அதன் வெளிப்பாடாக அவர் அல்ஜீரியாவிலும் எத்தியோப்பியாவிலும் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டார். நெல்சன் மண்டேலாவை வெளியே நடமாடவிட்டால் கறுப்பின மக்கள் அடிமைத்தளையை அறுத்தெறிவார்கள் என்பதை அறிந்த வெள்ளையர் அரசு நெல்சன் மண்டேலாவைச் சிறையில் அடைத்தது. அவருடன் தொடர்பு கொண்டவர்கள் சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் அவர்களின் சகல விதமான சொத்துக்கள் உரிமைகள் என்பன பறிக்கப்படும் என [illegible] சட்டம் ஆக்கியது. நெல்சன் மண்டேலா தன் இன்றுவரையிலான வாழ்க்கையில் அரைவாசிப்பகுதியை சிறையிலேயே செலவிட்டார்.

நெல்சன் மண்டேலா உள்ளே இருந்தாலும் அவர் வளர்த்த சுதந்திரப் போர் நின்று விடவில்லை. அவர் உருவாக்கிய போராளிகளால் செவ்வனே முன்னெடுக்கப்பட்டது. அவர்களுக்குச் சார்பாக குரல்கள் உலக அரங்கில் ஒலிக்கத்தொடங்கின. நெல்சன் மண்டேலா சிறையில் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார். சிலவேளை சிறைக்குள்ளேயே இறந்து விடுவாரோ என உலகை எண்ண வைத்தது.

உலக நாடுகளின் கண்டனக் குரல்கள் உரக்க எழுந்தபோது வெள்ளையர் அரசு தடுமாறியது. 1989ல் பதவிக்கு வந்த டி. கிளார்க் நாட்டின் பிரச்சனையை தீர்க்க முனைந்தார். நெல்சன் மண்டேலா சிறையை விட்டு வெளியே வந்தார். அரசுடன் பேச்சுவார்த்தை செய்யப்பட்டது. எந்த இடர் வந்தாலும் பிரச்சனையைத் தீர்ப்பதாக டி. கிளார்க் உறுதியுடன் செயற்பட்டார். இன்று தென்னாபிரிக்கா சுதந்திரமுள்ள ஜனநாயக நாடாக திகழ்கிறது. கறுப்பின மக்கள் சொல்ல முடியாத சித்திரவதைகளைக் வருடக்கணக்காக தனிமனித மரணங்களையும் சந்தித்த போதும் தம் முடிவில் உறுதி குலையாது பசப்பு வார்த்தைகளுக்கு மயங்காது போரிட்டபடியால் இன்று சுதந்திர மனிதர்களாக உலக அரங்கில் வலம் வருகிறார்கள். இவர்களின் சகிப்புத்தன்மையும் உறுதி தளராத கொள்கையும் தலைவனின் அசைக்க முடியாத நம்பிக்கைத் தன்மையும் எமக்கு வரலாறு சொல்லும் பாடமாகும். எமது தீரமும் உறுதியும் எதிர்காலத்தில் எமக்கு வளமான வாழ்வு தரும். ❁

முகிலன், தமிழீழம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சிறுகதை

அந்தப் புயல் அங்கேயே சூல்கொண்டதல்ல. சிங்களத்தில் கருக்கூட்டி, சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் மையங்கொண்டு தக்க தருணம் பார்த்து தமிழரின் தரிப்புக்கு மேல் வீசும்!

அப்போதெல்லாம் தமிழரின் எல்லைக் கிராமக் குடியேற்றங்களின் மீது தீச்சுவாலை கொழுந்துவிட்டெரியும். தப்பிப் பிழைத்தவர்கள் தம்பிரான் புண்ணியம் என்று இடம் விட்டு ஏதிலிகளாக ஓடிமறைவர். கறையான் புற்றெடுக்க கருநாகம் குடி கொண்டதாக கதைகள் முற்றுப் பெறும்.

திருமலை நகருக்கு சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது அக்கிராமம். அங்கேயும் புயல் வீசப்போவதை அறிந்துவிட்ட கிராமத்தில் திகில் புகுந்து அல்லோல கல்லோலப்படுத்தியது. ரம்மியமாக வந்துபோகும் மாலை மயக்கம் இன்று படுபயங்கரமாக மாறி அவர்களின் கழுத்தைப் பிடித்து நெரிப்பது போன்ற மனப்பிராந்தியைத் தோற்றுவித்தது.

பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. இருட்டோடு இருட்டாக இடம்மாறி விடுவதுதான் புத்திக்கூர்மை. ஒருவித பின்வாங்கும் யுக்தி. தூக்க முடிந்தவற்றை தோளில் போட்டுக் கொண்டு ஒரு நீண்ட வரிசையில் புறப்பட்டார்கள்.

பெருங்காடு தாண்டி தார்ச்சாலையில் ஏறி நடந்தனர்.

சுந்தரம் சைக்கிள் பாரில் இரண்டு பிள்ளைகளையும் ஏற்றி அமர்த்தி விட்டு, பின்புறமாக மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு நடந்தான். பின்னே மனைவி பாக்கியம் தலைச் சுமையோடு நடந்தாள்.

'எங்கையாவது நிண்டு போவம்...' பாக்கியம் சலித்துப் போய்க் கூறினாள். புரடிநரம்பு சில்லிட்டு விறைத்து வாங்கியது.

"பக்கத்தில் 'மில்' ஒன்று இருக்கிதாம்...அங்கே போவம்" சுந்தரம் நடந்தான்.

சமீபத்தில் அந்தக் கைவிடப்பட்ட மில் இருந்தது. அதற்குள் ஏற்கனவே சனங்கள் இருப்பதை சந்தடி காட்டியது. முற்றத்தில் சில ஆண்கள் கட்டைகளைப்போட்டு தீ மூட்டி விட்டு சுற்றி அமர்ந்திருந்தார்கள்.

அரட்டை அடிப்பது வேதனையைச் சற்று ஆற்றியது. அல்ஜீரியாவில் நடைபெறும் படுகொலைகள் பற்றிக் கூறி திகைப்பூட்டிக் கொண்டிருந்தார், ஒரு மூக்குக் கண்ணாடி மனிதர்.

சுந்தரம் குடும்பம் மில்லுக்குள் புகுந்தது. நல்ல இடவசதி. மனைவி பிள்ளைகளை அமர்த்திவிட்டு வெளியே வந்து தீக்கட்டையில் பீடியை மூட்டிவிட்டு கூட்டத்தோடு அமர்ந்தான்.

பாக்கியம் பிள்ளைகளை படுக்க வைத்துவிட்டு அருகில் அமர்ந்தாள்.

அதிகாலை நான்கு மணியென்று கூறினார் ஒரு மணிக்கூட்டுக்காரர். அதிகாலை நேரமாதலால் பீடிப் புகையை உள்வாங்கி ஊதுவதில் சுந்தரத்துக்கு சுகமாக இருந்தது.

கிழக்குப் பக்கமாயிருந்து ஒரு படபடப்புச் சத்தம். அது வரவர நெருங்கி இருதயத்தைக் குலுக்கிவிடும் அளவுக்கு இடியோசையானது.

'உலங்குவானூர்தி'

யாரும் அசையவில்லை. வானூர்தி மில் முகட்டைத் தாண்டியதும் வேகம் குறைந்து ஒருமுறை சுற்றி வட்டமிட்டது. குந்திக்கொண்டிருந்த மனிதக் குருவிகள் வானில் வட்டமிடும் இரும்புக் கழுகை எவ்வித சலனமுமின்றி அண்ணார்ந்து பார்த்தன. அந்தப் பறவை முன்னெப்போதும் எச்சம் போட்டு அசிங்கப்படுத்தியதில்லை.

அடுத்த கணமே புகையை ஊதியபடி ஏதோ ஒன்று தீக்கட்டைகளை நோக்கி வந்தது.

ஒரேவினாடி மரந்தடிகள் ஆடிய சைந்து பெருமூச்செறிந்தன. தீக்கட்டைகள் நாலாபுறமும் வீசப்பட்டன. மில் முகப்பு அதிர்ந்து கொட்டுண்டது. சுற்றி அமர்ந்திருந்தவர்களில்– இமைக்கும் நேரத்தில் – யாருமில்லை!

சதைத் துண்டங்கள் [illegible]களிலும் மரக் கொப்புகளிலும் மின்கம்பிகளிலும் தொங்கின. முழங்கால்–எலும்புகள் கரிபுரண்டும் புரளாததுமாக சிதறிக் கிடந்தன.

உள்ளே இருந்தவர்கள் அலறிக் கொண்டு வெளியே ஓடி வந்தனர்.



புகை மூட்டம் அசையாமல் நின்றது. கூக்குரல் தொடர்ந்தது.

பதினேழு மனித உருவங்கள் சக்கைகளாகிக் கிடந்தன.

சுந்தரம்?.... அவன் அணிந்திருந்த சிவப்புச் சேட்டின் ஒரு கிழிசல் துண்டைத்தான் பாக்கியம் கண்டெடுத்து கண்ணில் ஒற்றிக் கரைந்துருகினாள். பிஞ்சுக் குழந்தைகள் பேதலித்து அழுதனர்.

வேதனை, விரக்தி, ஆவேசம் அத்தனையும் அவர்களின் நெஞ்சங்களில் கருங்கற்களாக உட்கார்ந்து அழுத்த கண்ணீர் மல்கிக் கதறியபடி அந்தக் தேரோடும் வீதியில் நடையைத் தொடர்ந்தார்கள் அவர்கள்.

கணவனைத் தாரை வார்த்த பாக்கியம்




பார்வையை நீர்த்திரை மறைக்க பிள்ளைகளை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அதனை தள்ளியபடி சென்றாள். எதிர்பாராத ஒன்றினால் ஏற்பட்டுவிட்ட இழப்பு அவள் நெஞ்சில் ஓர் அசாதாரண வீரத்தையும் ஆண்மையையும் கருக்கூட்டிக் கொண்டிருந்தது.

கரைதாண்டி, கடல்தாண்டிச் சென்று வடக்கின் எல்லை மண்ணில் அவர்கள் கால் பதித்தனர்.

பண்டார வன்னியன் வீரநடை பயின்ற மண்! அந்தப் பெருங்குடி மக்கள் அனாதைகளாக வந்திறங்கிய போது பெருமையோடு தோள் கொடுத்தது.

திருமலை மாவட்ட மாந்தர் அங்கே கூடிக் குமைந்தனர். வாழ்க்கையில் புதிய தரிசனங்கள்– புதிய அறிமுகங்கள்–அனுபவங்கள் – காலக்கழிவு – மனச் சிரங்கை ஆற்றியது.

புதிய ஊருக்குள் ஆங்காங்கே பெண்களுக்கு வேலையிருந்தது. வேலை செய்ய நான்கு நாள், அதன் கூலிபெற நான்கு நாள் நடை என்றாகிவிட்டது. 'பாக்கியம் இந்த வேலை சரிவராட்டி' என்று கவலையோடு சொல்லிவிட்டு நிலத்தைப் பார்த்தாள் வள்ளி. வள்ளி, மில் குண்டு வீச்சில் தன் கணவனை இழந்த ஒரு பத்துவயதுச் சிறுவனின் விதவைத்தாய். மீண்டும் அவள் சொன்னாள், 'நம்மட்ட ஆளுக்கொரு சைக்கிள் இருக்குது'

'சைக்கிள் வச்சி என்ன செய்யிறது'

'ஒரு வேலை செய்வமடி...! வாழைக் குலை யாவாரம்பி'

வள்ளி உலகை மறந்துகொல்லென்று சிரித்தாள். பின்னர் சொன்னாள். சே! ஆம்பிளைகள் செய்யிற வேலை சிரிப்பாங்கடீ.

வள்ளி சிரிக்கவில்லை. 'சிரிப்'பைகவே அவள் கூறியதைக் கவனித்தாள். உறுதி கொண்டாள். உள்ளம் மலையென நிமிர்ந்தது. மண்ணெண்ணையையும் பெற்றோலாக்கும் தமிழீழ விடுதலைச் சூழல் அந்தப் 'பாவையர்'களையும் புதிய முயற்சியில் திணித்தது.

புதுமைகள் எப்போதும் புதிய பொலிவுடன் இருக்கிறதா?

புதிய தொழில் ஊரில் பழசாகிவிட்டது. இப்போது யாரும் புருவங்களை விரித்துப் பார்ப்பதில்லை.

தொழில் சற்று பரவாயில்லை என்றிருந்தாலும் மனதில் பாக்கியத்தை ஏதோவொன்று அழுத்திக் கொண்டிருந்தது.

ஏன்டி இப்படி முகத்தை குப் பென்று பிடித்துக்கொண்டிருக்கிறாய்!–

'ஒன்றுமில்ல வள்ளி...' பெருமூச்சு.

'சும்மா சொல்லுடீ'

பாக்கியம் சொன்னாள். 'என்ட பிள்ளைகளைப் படிக்கவைக்க வேணும்! தகப்பனுக்கு உது ஒரு பைத்தியமாக இருந்தது. ஒரே சொல்லுவார், பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டுமென்று' அவள் விழிகள் உப்புக் குளத்தில் மிதந்தது. குரல் தழுதழுத்து கரகரத்தது.

'குகன் குடியிருப்பு' ஒரு மாவீரனின் பெயரில் நாமகரணம் செய்யப்பட்ட அந்த அகதிகள் முகாமுக்கு அடிக்கடி பெண் போராளிகள் வந்து போனார்கள்.

பாக்கியத்தின் பிள்ளைகளும், மற்றைய சிறார்களும் அவர்களோடு ஐக்கியமாகிவிட்டிருந்தனர்.

'கலா அம்மா இருக்கிறாவா?...'–ஒரு போராளி.

அவர்கள் குடிசைக்குள் நுழைந்தார்கள். பாக்கியம் முகம் மலர்ந்து வரவேற்றாள். அமரச் சொன்னாள்.

'அக்கா...சுகமா...?'என்று கேட்டுவிட்டு அருகில் அமர்ந்தாள் போராளி.

'ஓம் பிள்ள நெஞ்சுநோவுதான்.'

'உங்களைப்பற்றி பிள்ளைகள் சொன்னாங்க. மூன்று சிறுவருக்காக ஏன் இப்படி அடிக்கிறீங்க...வாழைக்குலை சுமக்கிறது. நெஞ்சத்தான் தாக்கும். அதுபோக இந்த பிள்ளைகளைப் பாருங்க படிக்கிற வயசில பாழாய்ப் போகிதுகள்? வள்ளியக்காவோடையும் பிள்ளைகள எங்களிட்ட ஒப்படைங்க–நீங்களும் எங்களோட வாருங்க குழந்தைகள் இளமையிலதான் சீர்துக்கப்பட வேணும். அவர்களின் கல்வி, கலைத் திறமைகள் பேணப் பட்டு வளர்க்கப்பட வேணுமக்கா' அந்தப் போராளியின் நம்பிக்கை இழையோடியது. குழந்தை வதனங்களை பாக்கியம் இமைக்காது நோக்கினாள். போராளி மீண்டும் சொன்னாள்.

'நமது விவேகமிக்க வீரத் தலைவரின் வழிகாட்டுதலில் நமது இனம் மானத்தோடு வாழ்கிறது.

உதவியற்ற குழந்தைகளை உருவாக்க பல அமைப்புகள் இருக்கிறதக்கா, உங்களால் எமது போராட்டத்துக்கு பல வழிகளில் உதவமுடியும். நிம்மதியான ஒரு தமிழீழத்தைக் காணலாம்.

பாக்கியம் அவளது வேண்டுகோளை அங்கீகரிப்பதுபோல் பார்த்தாள். ❁

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

## 18



மார்ஷல் சுய்கோவ்

விமானிகளைப் பொறுத்த மட்டில் விமானத் தளங்களிலேயே போர்முனை ஆரம்பமாகியது. எங்களுடைய விமானத் தளங்களை எதிரி இடையறாமல் தாக்கினான். எங்கள் விமானங்கள் தமக்கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு புறப்பட்டதுமே அவற்றை வானில் மடக்க பாசிஸ்டுகள் முயன்றனர். விமானத்தளங்களின் மீதும், ஸ்டாலின்கிராட்டிற்கு செல்லும் வழிகளிலும், ஸ்டாலின்கிராட்டின் மீதும் வான் சண்டைகள் நடந்தன. விமானிகள் இரவு பகலென்று பாராமல் எந்நேரமும் சண்டையில் இறங்கினர். பகலில் அவர்கள் தம் தளங்களின் மீது எதிரி தொடுத்த தாக்குதல்களை முறியடித்தனர். இரவில் ஆயுதத் தளபாடங்களை ஏற்றிச் சென்றும் எதிரியின் நிலைகள் மீது குண்டுகளை வீசியும் எங்களுக்கு உதவினர்.

62வது படையுடன் ஒத்துழைத்த விமானிகளிடமிருந்து யுத்தத்திற்குப்பின் எனக்குப் பல கடிதங்கள் வந்தன. அவற்றில் ஒரு கடிதத்தை இங்கே மேற்கோள் காட்டுகிறேன்.

"1942 அக்டோபர் மாதம், முன்பின் கண்டறியா, இடையறாத, கடுமையான சண்டைகள் பூமியையும் வானையும் அதிரவைத்தன. பகலில் மட்டுமின்றி இரவிலும் – சூரியன் மறைந்ததிலிருந்து விடியும் வரை – எங்களுடைய விமானங்கள் இடையறாமல் பறந்து சென்று ஆக்கிரமிப்பாளர்களின் தலையில் குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பின. பாசிஸ்டுகள் புகுந்திருந்த, அவர்களின் தலைமையகங்கள் இருந்த தனிப்பட்ட குடியிருப்பிடங்கள், சாலைகள், வீடுகளைத் தாக்க வேண்டியிருந்தது. தரைப்படை துருப்புகள் எதிரியின் அருகிலிருந்து சண்டையிட்டன. எங்களுடைய விமானிகள்



சிறு தவறிழைத்தால்கூட போதும், குண்டுகள் எங்கள் தலைமீது விழக்கூடும்".

பூமியோ நரகமாயிருந்தது. குண்டுகளின் வெடியோசை பகலிலும் இரவிலும் அடங்கவேயில்லை. எங்கள் விமானங்களும் எதிரி விமானங்களும் ஸ்டாலின்கிராட்டின் மீதிருந்த இரவு நேர வானத்தை மொய்த்தன. ஒளி?ட்டும் குண்டுகள் வானில் மெதுவாக எரிந்து எங்கும் ஒளி வெள்ளத்தைப் பரப்பின. சூழ்ந்த ஒளிபட்ட இடமெங்கும் பல்வேறு விமானங்கள் பலப்பல திசைகளில் வெவ்வேறு வேகங்களில் பறந்தது தெரிந்தது. இருட்டில் கண்களில் படாத விமானங்களின் என்ஜின்களிலிருந்து வந்த கரும்புகை மூட்டத்தில் தம் விமானங்களை எவ்வளவோ முறை அங்குமிங்குமாகத் திருப்ப நேரிட்டது. சில சமயங்களில் மோதல்களும் ஏற்பட்டன.

வோல்காவின் கரைகளில் பெட்ரோல் சிலிண்டர்களில் – எதிரியின் விமானக் குண்டுகள் விழுந்ததால் அவை பற்றியெரிந்தன – நெருப்பும் புகையும் கிட்டத்தட்ட 1,000 மீட்டருக்கும் மேலாக உயர்ந்து விண்ணை எட்டின. மூச்சுவிடுவதே கடினமாயிருந்தது. இப்புகையும் நெருப்பும் விமானப் பறத்தலுக்கும் இடையூறு விளைவித்தன.

ஒரு நவம்பர் மாத இரவில் எங்களுடைய யூ–2 ரக விமானங்கள், மத்திய அ தூபா பிரதேசத்தில் அவசரமாக ஏற்படுத்தப்பட்ட விமானத் தளத்திற்கு இடம் மாற்றப்பட்டன. தரையிறங்கியதும், அணைந்து அணைந்து எரிந்த அடையாள விளக்குகளை நோக்கி கவனமாக விமானத்தை செலுத்தினோம். ஆங்கு நிலவிய அசாதாரண நிலவரம் எங்களை வியப்பில் ஆழ்த்தியது. மூடிய பின்பகுதிகளுடன் கூடிய பெரிய உயரமான லாரிகள் விமானங்களை நெருங்கின. அவற்றிலிருந்து குண்டுகளுக்குப் பதில் ஏதோ பெரிய, கனமானவற்றை இறக்கினர். [illegible] பணியாளர்கள் அவற்றை மிகவும் கஷ்டப்பட்டு குண்டு தாங்கிகளில் பொருத்தினர்.

யூ–2 ஒரு என்ஜின் உள்ள இலேசான விமானம். இதனை பின்னால் பிஓ–2 என்று அழைக்கலாயினர். சமாதான காலத்தின் முதன்முதலாக விமானிகளைப் பயிற்றுவிக்க இது பயன்படுத்தப்பட்டது.

இறுதியாக விடயம் புரிந்தது. சுமார் 2 மீட்டர் நீளமும் 1 மீட்டர் குறுக்களவும் உடைய சாக்குகளில் கண்ணிவெடிகள், குண்டுகள், தோட்டாக்கள், உணவுப் பொருட்கள் போன்றவை இருந்தன. குண்டு தாங்கிகளில் பொருத்தப்பட்ட இச்சாக்குகளை ஸ்டாலின் கிராட்டிலிருந்த எங்கள் துருப்புகளுக்கு வானிலிருந்து வீச வேண்டியிருந்தது. அந்நேரத்தில் நகரத்திற்கு இவற்றை எடுத்துச் செல்ல வேறு வழியிருக்கவில்லை. யூ–2 ரக விமானங்கள் இப்படியாக வான்போக்குவரத்து விமானங்களாயின. தலா சுமார் 100 கிலோ எடையுள்ள இரண்டு சாக்குப்பைகள், சரக்கின் எடை அதிகமாக இல்லாவிடினும் அளவும் வடிவமும் பெரியவையாக, நம்பத்தகாதவையாக இருந்தன. காற்றில் மட்டும் அந்தச் சாக்கு திசை திரும்பினால் கல்லைப்போல் விமானம் கீழே விழும். விமானத்தின் வளியியக்கத் தன்மைகள் எல்லாமே பாதிக்கப்படும்.

சரக்குகளை ஏற்றி முடிந்ததும் விமானிகளை ஒரு பரந்த பூமியடி அறையில் – அதன் பக்கங்களில் மரக் கட்டில்கள் இருந்தன – ஒன்று திரட்டினர். அவற்றில் வரைபடங்கள் வைக்கப்பட்டிருந்தன. ரெஜிமென்டின் நேவிகேட்டர் மார்கோவ்கின் தனக்குத் தேவையான கணக்குகளைப் போட்டார். அவர் முன்பிருந்த நகரத்தின் வரைபடத்தில் மூன்று குறுகிய இடங்கள் – தாக்குமனைகள் – தடித்த கோடுகளால் நகரத்திலிருந்து தனியே பிரிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தன.

மிகச் சிறிய தாக்குமுனையில் ஆயுதத்தளபாடங்கள் அடங்கிய சாக்குகளைக் கீழே போட வேண்டுமென ரெஜிமென்ட் கமாண்டர் கட்டளையிட்டார். ஸாய்த்ஸெவ்ஸ்கி தீவுத் திசையிலிருந்து பறந்து சென்று, 600 மீட்டர் உயரத்திலிருந்து கீழே போட வேண்டும். செங்குத்தான [illegible] மீதுள்ள தீக்கணப்புகள்தான் அடையாளம்.

எல்லா சாக்குப் பைகளும் சரியாக மாட்டப்பட்டுள்ளனவா என்று சோதித்தோம். பின் பறக்க தயாரானோம். மேலெழும்பும்போது திசையைத் தவறவிடாமலிருப்பது எளிதாயிருந்தது. ஏனெனில், எங்களுக்கு நேர் எதிரே இரவு நேர ஸ்டாலின்கிராட் செம்பழுப்பு நெருப்பொளியில் நன்கு தெரிந்தது.

வோல்காவை நெருங்கியதும் 600 மீட்டர் உயரத்தில் பறந்தோம். இதோ நீர்ப்பரப்பு கண்ணாடி போன்று தெரிகிறது. உயர்வான எதிர்க்கரையின் மீதுதான் எங்களுடைய கவனம் முழுவதுமிருந்தது. நீர்ப்பரப்பிற்கும் செங்குத்தான, உயரமான கரைக்கும் இடையில் ஒரு குறுகிய பகுதியில் மூன்று தீக்கணப்புகள் பிரகாசமாக எரிந்தன. ஆற்றிலிருந்தும் இடது கரையிலிருந்தும் பார்த்தால் மட்டுமே அவை தெரிந்தன. எதிரி இவற்றைப் பார்க்கவில்லை. ஸாய்த்ஸெவ்ஸ்கி தீவு மீது பறந்து, சரக்கைக் கீழே போட வேண்டிய இடத்தை நோக்கி விமானத்தைத் திருப்புகிறேன். குண்டு தாங்கிகளைத் திறக்கும் பட்டனை கைகள் தொட்டுப்பார்த்துக் கொள்கின்றன.

விமானம் கரையெல்லைக் கோட்டைத் தாண்டிச் செல்கிறது. இப்போது ஆறு எங்களுக்குப் பின்னால் உள்ளது. தீக்கணப்புகள் விமானத்திற்குக் கீழே எங்கோ உள்ளன. அவை கண்களில் படவில்லை. சாக்குப்பைகளைக் கீழே போட வேண்டிய இடம் நெருங்குகிறது. இப்போது 600 மீட்டர் உயரத்திலிருந்து மட்டுமே வோல்காவை ஒட்டியுள்ள அந்த நிலப்பரப்பு எவ்வளவு சிறியதென மதிப்பிட முடியும். சற்று முன்னாலோ நெருப்பொளி தெரிகிறது. அது போர் முனையின் முன்னணி. சாக்குப் பைகள் எங்கே கீழே விழும்? நேவிகேட்டருக்குக் குண்டுகளை வீசித்தான் பழக்கம். சாக்குப் பைகளுக்குப் பதில் குண்டுகள் இருந்தால் எவ்வளவு எளிதாயிருக்கும்! இலக்கின் மீது சரியாக வீசியிருக்கலாம். ஆனால், இப்போது பாங்கற்ற, மோசமாக காற்று கவடுருவிச் செல்லக்கூடிய சாக்குப் பைகள் எப்படி, எங்கே விழுமென்பது பெரும்பாலும் காற்றின் வேகத்தையும் காற்றடிக்கும் திசையையும் பொறுத்தது. ஏராளமான நெருப்புகளினால் பல காற்றோட்டங்கள் எழுகின்றன. எந்தக் காற்றின் திசையை வைத்து எங்கே கீழே போடுவது என்று கணித்துள்ளனரோ அத்திசையை மற்ற காற்றோட்டங்களின் தாறுமாறான போக்கு பாதிக்கக் கூடும்.

'சஷா, கீழே போடாதே, சற்றுப் பொறு' என்று நான் நேவிகேட்டரிடம் கூறுகிறேன். விமானத்தை இடது புறமாகத் திருப்பி முன்பக்கம் சுட்டிக் காட்டுகிறேன். அங்கே விமானத்தோடு ஒரே உயரத்தில், மிக அருகே ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியா இடத்தில் மின்னி மறையும் ஒளிப்பாதைகள் ஒன்று கலக்கின்றன. அத்தருணத்தில் நானும் நேவிகேட்டரும் நெருப்பொளியின் பின்னணியில் நன்கு அறிமுகமான யூ–2 ரக விமானத்தின் உருவத்தைப் பார்க்கிறோம். அடுத்த நொடியில் இரண்டு புள்ளிகள் விமானத்திலிருந்து பிரிகின்றன – இரண்டு சாக்குப் பைகள் பிரிந்து, அவற்றின் மீது இரண்டு பெரும் வெண்ணிறக் குடைகள் விரிகின்றன.

'பார்— பாரதுட!' நான் நேவிகேட்டரைப் பார்த்து கத்தினேன்.

தாக்குமுனையின் நேர் மேலே, மெதுவாக கீழிறங்கும் இரண்டு வெண்ணிறப் புள்ளிகளுக்கு நேர் மேலே அப்படியே திருப்புகிறேன்.

இதோ வெண்புள்ளிகள் மணல் மேட்டைத் தாண்டி, காற்றில் மிதந்தபடி, கரையிலிருந்து விலகி, திசை மாறி வோல்கா ஆற்றினுள் விழுகின்றன. ஆம், அப்பைகள் யாருடைய கரங்களுக்கும் கிடைக்கவில்லை. விமானப் பறத்தலால் ஒரு பலனும் இல்லாமல் போயிற்று.

'தீக்கணப்புகளை நோக்கித் திருப்பு!' என்று என்னைப் பார்த்துக் கத்தினான் நேவிகேட்டர். 'வேகத்தைக் கூட்டு. 200 மீட்டர் உயரத்திலிருந்து போடுவோம். அப்போது அநேகமாக அவை நம்மவர்களைச் சென்றடையும்'.

எங்களுக்குக் கீழே உயரமான கரையில் மணல் மேடு. உயரம் 150 மீட்டர். தரையிலிருந்து விமானத்தை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். கீழே மேடும் பள்ளமுமான இருண்ட தரைப்பரப்பு. சாக்குப் பைகளைப் போட வேண்டும். நேவிகேட்டர் பட்டனை அழுத்துகிறான்.

**தொடரும்......**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்
### அத்தியாயம் இருபத்திஐந்து

(தொடர்ச்சி)

கால்நடை வண்டிகளினதும், சரக்கு வண்டிகளினதும் கதவுகள் திறக்கப்பட்டதோடு, அவனைப்போல் திறந்த வண்டிகளில் இருந்தவர்கள் மேலால் பாய்ந்து வெளியே வரும்படி கடுமையான அடித் தொண்டைக் குரல்களால் உத்தரவிடப்பட்டது. பரிதாபத்துக்குரிய பலிக்கடாக்களாகிய மக்கள் தங்களை எப்படியோ சமாளித்துக் கொண்டு வெளியே ஒரு நீண்ட மேடையில் இறங்கியதும், குண்டாந்தடிகள், சாட்டைகள், கைத் துப்பாக்கிகளோடும், கட்டப்பட்டிருக்கும் கயிற்றில் அந்தரப்பட்டுக் கொண்டிருந்த பயங்கரமான நாய்களுடனும் ஆயத்தமாக நின்ற யெர்மன் அதிரடிப்படையினரையே கண்டனர். குளிர் காற்றிடையே சுழற்றி வீசப்பட்ட சாட்டைகள் வேதனையான கதறல்களை வெளிக் கொண்டு வந்தன. நடக்க வலுவிழந்தவர்களின் கபாலங்களில் குண்டாந்தடிகள் தடதடத்தன. கைத்துப்பாக்கி ரவைகள் உடல்களை ஊடுருவின.

ஒரு வரிக்கு நால்வர் கொண்ட நீண்ட வரிசை ஒன்று மேடையின் முழு நீளத்திற்கும் உண்டாக்கப்பட்டது. பின்பு அந்நிலையத்தின் பெரிய அறையொன்றிற்குப் போகச் செய்யப்பட்டார்கள். அந்த வரிசை, நிலையான மந்த கெதியில் அந்த அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

டொல், தன்னைச் சுற்றிப் பார்வையைச் செலுத்தினான். அவனுடைய இடது பக்கத்தில் புகையிரதங்கள் இருந்தன. புகையிரதங்களுக்கு அப்பால் புகையிரத நிலைய அறைக்கு வெளியே பாதையில் நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருக்கும் ட்றக் வண்டிகளை அவதானித்தான். அவை மூடப்பட்டிருக்காததால் அவை விசவாயு வாகனங்களாக இருக்க முடியாது என டொல் அனுமானித்துக் கொண்டான். அவனுடைய வலது பக்கத்தில் வரிசையாக நின்ற காவலர்களுக்கப்பால், ஒழுங்காகச் சுத்தரித்து விடப்பட்டிருந்த புற்தரைகளாலும், மரங்களாலும் சூழப்பட்டிருந்த, செங்கற்களினாலான பேர்க்கினோவின் விசவாயுக் கூடங்களையும் காணக் கூடியதாக இருந்தது. அவன் தன் வலப்பக்கமாக இருந்த கட்டடங்களையும், அவற்றின் கூம்பு வடிவமான புகைப்போக்கிகளையும் ஆராய்ந்து அப்பக்கம் தான் படுகொலைக்கூடங்கள் இருக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

வரிசை தொடர்ந்து அந்த அறையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. பயத்தினால் ஏற்பட்ட ஒருவித மயக்கம் அவனை வாட்டியது. ஒரு மனிதன் தடுமாறிக் கீழே விழுந்து எழும்ப முடியாமல் கிடந்தான். உறுமுகின்ற இரு நாய்கள் அவன்மேல் ஏவிவிடப்பட்ட அவை அவனை நார்நாராகக் கிழித்தன. அவனுடைய கதறல்கள் டொல்வுக்கு நடுக்கத்தை வரவழைத்தன. அவன் தன் கட்டுப்பாட்டை மீளப் பெற்றுக் கொள்ளக் கடுமையாகப் போராடினான். பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாதென அவன் நன்றாகவே அறிந்திருந்தான். அவனுடைய வரிசை அறையினுள் சென்றது. பெரிய வரிசை இப்போது நாலு தனி வரிசைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் அந்த அறையின் மறு கோடியில் ஒவ்வொரு மேசைகளின் பின் உட்காந்திருந்த நான்கு யேர்மன் வைத்தியர்களை நோக்கி அசைந்தன.

ஒவ்வொரு வைத்தியரையும் சுற்றிக் காவலர்களும், உதவியாளர்களும் நின்றிருந்தனர். டொல் என்ன நிகழ்கின்றது என்று அறிந்து கொள்ளும் முகமாகத் தன் கவனத்தைத் தனக்கு முன்னால் இருக்கும் மேசையடிக்குச் செலுத்தினான்.

அந்த வைத்தியர் ஒருத்தியோ ஒருவனோ தனது மேசையில் முன்வந்து நின்றதும் விரைவாக அவர்களைப் பார்வையிட்டான். பின்பு விரைவாக மூன்று திசைகளில் ஒரு திசையால் போகும்படி கட்டளை இட்டுக் கொண்டிருந்தான்.

முதலாவது வழி அறையின் வலப்பக்கம் இருந்தது. டொல் கணக்கிடத் தொடங்கினான். பத்துப் பேரில் ஏழு பேர் அவ்வழியாலேயே அனுப்பப் பட்டனர். இவர்கள் வயோதிபர்களாகவும், குழந்தைகளாகவும், அல்லது மோசமான உடல்நிலை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அறையின் வலப்பக்கம், வாயுக்கூடங்கள் இருப்பதை அனுமானித்துக் கொண்டிருந்ததால் இவ்வழியால் போகிறவர்கள் உடனடியாகவே கொல்லப்படுவார்கள் என்ற முடிவுக்கு வந்தான்.

இரண்டாவது வழி, அறையின் இடப்பக்கத்தில் இருந்தது. இந்த வெளியே போகும் வழி வெளியே காத்துக் கொண்டிருக்கும் ட்ரக் வண்டிகளுக்கு இட்டுச் சென்றது. பத்தில் இரண்டு பேர் அவ்வழியால் சென்றனர். இவர்கள் எல்லோரும் ஆரோக்கியமானவர்களாக தோற்றமளித்தனர். இவர்கள் கட்டாயவேலை முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று டொல் அனுமானித்தான்.

வலதுபக்க வழி உடனடி மரணத்தையும், இடது பக்க வழி தற்காலிக உயிர் தப்புவதையும் குறித்தது. மூன்றாவதாக ஒரு குழுவும் இருந்தது. இவர்கள் தெரியப்படுவது பத்தில் ஒருவர் என்ற ரீதியில் இருந்தது. அநேகமாக இளம் பெண்களாக இருந்தார்கள். இவர்கள் மிக அழகாக இருந்தார்கள். சில 13 – 19 வயதுக்கிடைப்பட்ட பையன்களும் இவர்களோடு போய் நிற்க வைக்கப் பட்டார்கள்.

அவன் தனது வரிசை மெதுவாக முன் செல்கையில் பத்துப் பன்னிரண்டு ஆழ்ந்த சுவாசங்களை இழுத்து விட்டுக் கொண்டான். தானும் எலும்பும் தோலுமாக இருப்பதால் இடது பக்கக் கதவின் ஊடாகக் கட்டாய வேலை முகாம்களுக்கு அனுப்பப்படும் சாத்தியக்கூறுகள் தனக்கு இல்லையென்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

அடுத்த வரிசையில் ஒரு பெண் அலறிக் கொண்டிருந்தாள். அரை டசினுக்கு மேற்பட்ட காவலர்கள் அவளருகில் குவிந்து அவள் பாவாடையைக் கிழித்தெறிந்தனர். அதற்குள் ஒரு பச்சிளம் பாலகனை ஒளித்து வைத்திருக்க முயற்சி செய்திருந்தாள்.

வலம் வலம். . . வலம் எனத் தொடர்ந்து பலியாகப் போகிறவர்களுக்கு அந்த வைத்தியர் ஆணையிட்டுக் கொண்டே இருந்தான்.

டொல் லண்டல் தனது முறைக்காக மேசையின் முன் வந்து நின்றான். வைத்தியர் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு, "அந்த வலதுபக்க வாசலால் போ" என்றான்.

டொல், மௌனமாகச் சிரித்துக் கொண்டான். "டொக்டர் நீங்கள் ஒரு தவறு செய்கிறீர்கள்" மிக்க அமைதியுடன் டொல் சொன்னான். "நான் போலி ஆவணங்கள் தயாரிப்பதில், நோட்டுகள் தயாரிப்பதில் நிபுணன். உங்கள் பெயரை அந்தக் கடதாசியில் எழுதுங்கள். நான் நிரூபித்துக் காட்டுகிறேன்." என்றான்.

அந்த வைத்தியன் அதிர்ச்சியுடன் பின்னால் சாய்ந்து கொண்டான். டொல்லுடைய அமைதிப்போக்கு அவனை ஆகர்சித்து விட்டது. ஏனெனில் அவன் தலைவிதி எப்படியிருக்குமென வைத்தியன் ஏற்கனவே அறிந்திருந்தான். இந்த இளைஞன் ஒரே மாதிரியாக நிகழ்ந்து கொண்டிருந்த மரண அணிவகுப்பை திடுதிப்பென நிறுத்தி இருந்தான். வைத்தியன் தன் சுய நினைவுக்கு மீண்டு கொண்டதோடு அவன் முகத்தில் ஒரு வஞ்சகப்புன்னகை இழையோடியது. இரண்டு காவலர்கள் டொல்லைப் பிடித்து இழுத்துச் செல்ல முயன்றனர்.

"நில்லுங்கள்" வைத்தியன் ஆணை இட்டான். அவன் திரும்பவும் டொல்லைப் பார்த்து விட்டு திரும்பி நிற்கச் சொன்னான். ஒரு விநாடி இப்படியான முட்டாள்த் தனமான முயற்சிகளைக் கண்டிருந்ததால் சிறிது அலுப்புற்றான். பையன் புத்தி சாலித்தனமாகத் தப்ப முயல்கிறான் என்று தெரிந்தது. அப்பையனை வலது பக்க வாசலால் போகச் சொல்ல வாயெடுத்தாலும் தனது விசயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் மேலோங்க வைத்தியன் தன் பெயரை ஒரு கடதாசிக் கட்டில் எழுதிக் கொடுத்தான்.

டொல் விரைவாக

லியோன் யூரிஸ்

அக்கையெழுத்தின் அச்சொட்டான ஆறு பிரதிகளை எழுதிக் கடதாசியைத் திருப்பிக் கொடுத்தபடி கேட்டான். "இதில் நீங்கள் எழுதியது எது?"

வைத்தியரின் தோளுக்கு மேலால் எட்டிப் பார்த்த அரை டசினுக்கு மேற்பட்ட காவலர்கள் வியப்பினால் வாயைப் பிளந்தனர். வைத்தியன் டொல்லைத் திரும்பவும் பார்த்து விட்டு, ஒரு காவலனின் காதில் ஏதோ சொல்ல அவன் விரைவாக வெளியே நடந்து சென்றான்.

"ஒரு பக்கமாகப் போய் நில்" வெடித்தான் வைத்தியன்.

தொடரும்...



## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்ந்த கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை 11 - 12 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நாளை விடியும்......**

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
'Kalathil',
Eelam House, 202 Long Lane, London SE1 4QB.

# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

# வீச்சுடைய விடுதலையின் வேந்தர்களே வாழி !



கையினிலே குண்டோடு
கழுத்தினிலே நஞ்சோடு
மெய்யதனைத் தீயாக்கி
மேலுயர்ந்த மாவீரா!

செய்கையினாற் தமிழீழச்
சிந்தனைக்கு உயிர்கொடுக்கும்
ஐய உனை அடிதொட்டு
வையம் தொழும் உண்மை!

பொய்யறியா நெஞ்சே! – புகழ்
பகட்டறியாத் தமிழ்ப்பிஞ்சே!
நெய்யெனவே உன்னுயிரை
நீ தந்தாய் நமக்கென்றே!

கொய்தெமது குடியழிக்கும்
கொடுங்கோண்மை வீழ்ந்து– இங்கு
ஐயமின்றி ஒரு தேசம்
ஆர்ப்பரிக்கும் ஈதுண்மை!

பைய எழும் பொழுதெமக்காய்!
பறவைகளின் கீத மெழும்!
பெய்யும் மழை, பயிர் விளையும்
பாயக் கலங்கள் அலை படரும்!



காட்டினிலே காரிருளில்
கார்பதங்கள் ஊரும்!
கண்மணிகள் தீச்சுடராய்
நோக்கறியப் பாயும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மூச்சுவழி மொழிபிறந்து
முழுநிலையும் பேசும்!
முன்னசையும் முட்புதர்க்குள்
மௌன அலை பாயும்!

நீர்ச்சுனைகள் நீந்தியுடல்
தோய்ந்து நிலை தேடும்!
நெஞ்சினிலே தாகத்தின்
நினைவு நிழலாடும்!

காய்ச்சலுடன் கடுஞ்சுரமும்
காற்றில் உறவாடும்!
கவலைகளும் உறவுகளும்
நாட்டின் உரமாகும்!

பூச்சி புழுபாம்பு தேளும்
பாறை கல்லுமுள்ளும்
பொல்லாத சிலந்திகளும்
புலி கரடிதானும்
தாச்சி மறித்திட அவற்றைத்
தவிர்த்து நடைபோடும்
வீச்சுடைய விடுதலையின்
வேந்தர்களே வாழி!

– புலவர் –



# உயிர் கொடுத்து உயிர் காத்த உத்தமர்கள்

கார்த்திகை 27ம் நாள் தமிழீழத் தேசத்தின் – தமிழீழ மக்களின் மிகவும் புனிதமான தினம். எமது பாதுகாப்பான அமைதி வாழ்வுக்காக– எம் நாட்டின் விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்த மாவீரர்களினது நினைவால் தேசமே எழுந்து நின்று வீரவணக்கம் செய்யும் தேசியதினம். நள்ளிரவில் மாவீரர்களுக்காய் ஈகைத்தீபச்சுடரேற்றி அந்தச் சுடரொளி இருளை விரட்டுவது போல் எங்கள் தேசத்தின் அடிமை இருளையும் மாவீரர் விட்ட பணி ஏற்று நிற்கும் நம் முயற்சியால் விரட்டியடிப்போம் என மாவீரர் உறைவிடங்களில் உறுதியின் உறைவிடங்களில் மக்கள் மனஉறுதி கொள்ளுகின்ற முக்கியதினம்

தமிழீழ மக்களது தேசப்பற்றினை தேசிய உணர்வினை நன்றிப்பெருக்கினை வெளிப்படுத்தும் நாளாகவும் இத்தினம் திகழ்கின்றது.

இந்தப் புனிதமான தினத்தில் நாம் மாவீரர்கள் நினைவால் அவர்களின் ஈடிணையற்ற மகத்தான தியாகத்திற்குத் தேசப்பற்றுக்கு விடுதலைக்கான உயிர் அர்ப்பணிப்புக்கு தலை வணங்கி வீராஞ்சலி செய்வது முக்கியமான பண்பு. ஆனால் அதை விட முக்கிமான பங்கு அம் மாவீரர்களின் மகத்தான தியாகங்கள் அர்த்தமுள்ளனவாக மாற – அம்மாவீரர்கள் வரிந்து கொண்ட உன்னதமான தமிழீழ விடுதலை என்ற இலட்சியம் எய்தப்பெற எம்மாலான எல்லாவழிகளிலும் உழைக்க உறுதி பூண்டு தம் பொறுப்புக்களைத் தாமே உவந்தேற்கும் மனோநிலையினை வளர்த்துக் கொள்வதாகும்.

மாவீரர்கள் அற்புதமாக உருக்கொண்டு எழவில்லை. எம்மிடை எம் குழந்தைகளாக எம் மடிமீது விளையாடியவர்கள் சிலர்– எம்மோடு பள்ளித் தோழர்களாக பழகி உறவாடினவர்கள் சிலர்– நண்பர்களாக, உறவினர்களாக, அயலவர்களாக ஊர்க்காரராக தேசமக்களாக எம்மோடு வாழ்ந்தவர்களே மாவீரர்களாக நாம் கண்கண்ட தெய்வங்களாக மாறிநிற்கின்றனர். எம்மைப் போல் வாழவேண்டும் – படிக்க வேண்டும் – தங்கள் குடும்பங்களுடன் கூடிமகிழ்ந்து கொண்டாடி மகிழவேண்டும்– தாமும் தம் குடும்பத்தவர் நலம்பெற வல்லன செய்தல் வேண்டும்– என்ற ஆசைகள் பாசங்கள் அன்புணர்வுகள் கொண்ட சாதாரண மனிதர்களே அவர்கள். ஆனால் அந்த பாசங்களைக் பந்தங்களை உள்ளத்தாகங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு தம் இனம் வாழத் தம்மையே அர்ப்பணிக்க அவர்கள் கொண்ட மனஉறுதி தான் அவர்களைத் தெய்வங்களாக உயர்த்தி நிற்கின்றது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வள்ளுவவாக்கின் பொருளுக்கு உதாரணமாக இவர்கள் இலங்கு கின்றனர். இவர்கள் கொண்ட கொள்கையில் மட்டுமல்ல செயற்பாட்டிலும் உறுதியான பாதையைக் கடைப்பிடித்தவர்கள். சிங்களப் பேரினவாதத்தின் இனஅழிப்பு வாழ்வழிப்பு செயற்திட்டங்களில் இருந்து தப்பி உயிர்வாழ்வதற்காகவும் தம் மேல் சிங்களப் பேரினவாதத்தால் திணிக்கப்பட்ட யுத்தத்தை எதிர்ப்பதற்காகவும் ஆயுதப் போராட்ட நிர்ப்ப ந்தத்திற்குத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை நன்கு புரிந்து கொண்டு தலைவர் பிரபாகரனின் மேல் அளவற்ற பேரன்பு கொண்டு களமாடிய வேங்கைகள் இவர்கள். தமிழீழத் தேச இனம் ஆற்றலும் அர்ப்பணிப்புமுள்ள தேசத்தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழத் தேசத்தை மீட்பதற்காக நடாத்தும் தேசிய விடுதலைப்போராட்டம் பலம்பெற ஒரே தலைமையின் தேவையின் முக்கியத்துவத்தை இவர்கள் தமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்படுத்தத் தவறியதில்லை. உயர்ந்த எண்ணங்கள் இருந்தால் மட்டும் போதாது அதனை செயற்படுத்தக் கூடிய ஆக்கபூர்வமான அமைப்பு அதனை திறமையுடன் இயக்க கூடிய தன்னலமற்ற ஆற்றலுள்ள தலைமை என்பனவற்றின் தேவைகளைப் புரிந்து அதற்கேற்ப தமது பணி செய்த இவர்கள் எல்லாவிதத்திலும் தம்மை தேசவிடுதலைக்காக அர்ப்பணித்த மகத்தான மனிதர்கள். அதனால் தான் இவர்கள் தியாகங்கள் வீணாகப் போக இடங்கொடாது இன்று வரை தமிழீழத் தேசவிடுதலைப் போராட்டம் சிங்கள ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் சகலவிதமான தடைகளையும் எதிர்கொண்டு வெற்றியுடன் முன்னேறி விடுதலையின் இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நேரத்தில் தாயகத்தில் உணவை – மருந்தை – மனித உரிமைகளை வாழும் உரிமைகளை எல்லாம் மறுத்து தமிழீழ மக்களை அடிமை கொள்வ[illegible] தீவிரமான முயற்சிகளையும் தாயகத்[illegible] வெளியே [illegible]லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தமிழர்களுடைய நற்பெயரை அவர்களுடைய சமூகபலத்தை அழிப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு தமிழீழத் தேச விடுதலைப் போராட்டத்திற்கு இவ்வழிகளூடாக இடையூறுகளை ஏற்படுத்த சந்திரிகா அரசாங்கமும் அதன் பெயரில் மட்டும் தமிழ்ப்பெயர் கொண்ட வெளிவிவகார அமைச்சரும் படாதபாடு படும் நேரத்தில் 98ம் ஆண்டு மாவீரர்கள் தினம் இடம்பெறுகிறது.

இதனால் மாவீரர்கள் விட்ட பணிகளைத் தொடரும் பங்கேற்பில் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் மிக மிக கணிசமான பங்கெடுப்பை ஏற்க வேண்டிய தேவையை இவ்வருட மாவீரர்கள் தினம் எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றது. தமிழீழ மக்கள் மேல் குறிப்பாக யாழ்க்குடா நாட்டு மக்கள் மேல் சிறிலங்காப் படைகள் நடாத்தி வரும் இனஅழிப்புக்களையும், பாலியல் வன்முறைக் கொடுமைகளையும், மனித உரிமை மீறல்கள், தனிப்பட்ட வாழ்வின் சுதந்திர மீறல்கள்– மட்டுப்படுத்தல்கள் என்பவற்றையும்– தமிழர்களது தேச உட்கட்டுமானங்களுக்கு ஏற்படுத்தும் ஈடுசெய்யப்பட முடியாத திட்டமிட்ட பேரழிப்புக்களையும்– இந்த எல்லா மனிதாயத்திற்கு எதிரான செயற்பாடுகளையும் பூரணப்படுத்த தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை நடாத்தி, அதை நியாப்படுத்த பலவகையான அரசியல் சுலோகங்களையும் சிறிலங்கா அரசாங்கம் கூறிவருகிறது.

இந்த யதார்த்தத்தை நாம் வாழும் நாடுகளில் உள்ள மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் எடுத்துக் கூறி மனிதகுலத்தின் மனச்சாட்சியின் குரல் ஒலியை எம் தமிழீழ மக்களுக்காக எழச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய நமது மாபெரும் கடமையாகின்றது. இந்த சூழ்நிலைகளே எங்கள் உடன்பிறப்புக்களை தம் வாழ்வுக்காகப் போராட வைத்து அதில் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணிப்பவர்களின் தொகையை அதிகரிக்க வைக்கின்றது. இதனால் இச் சூழ்நிலைகள் மாறி எங்கள் உடன் பிறப்புக்களை யுத்தம் என்ற சொற்றொடரில் கொன்று குவித்து அவர்களை மேலும் சிறுபான்மையினமாக்கி அதன் மூலம் அவர்கள் மேல் அரசியல் திணிப்புக்களை மேற்கொள்ளலாம் என்ற சிறிலங்காவின் பச்சை இனவாதத்திற்கு–பேரினவாதவெறிக்கு–திட்டமிட்ட இனஅழிப்பு–இனத்துடைப்பு முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளியினை வைப்பியுங்கள் என சர்வதேச மக்களையும் அமைப்புக்களையும் அரசாங்கங்களையும் வற்புறுத்த வேண்டியவர்களாக புலம்பெயர் தமிழர்களாகிய நாம் உள்ளோம்.

மேலும் ஒரு தேச இனம் தன்னை தேசஇனமென உலகிற்கு இனங்காட்ட – தன் உரிமைகளை நிலைநாட்ட அதற்கு பலம் வேண்டும். இதற்கு அம் மக்களுக்கு பொருட்பலமும் நிறைய வேண்டும். இதனை உணர்ந்து மாவீரர்களின் மகத்தான தியாகங்கள் அர்த்தமுள்ளதாக நம்மாலான நிதிப்பலத்தையும், நம் துன்புறும் துயருறும் மக்களுக்கும் அவற்றை தகர்த்து தேச விடுதலையின் கதவுகளைத் தட்டத் தொடங்கி விட்ட தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அளிக்க வேண்டியவர்களாகவும் புலம் பெயர் தமிழர்களாகிய நாமுள்ளோம்.

இவைகள் எழுதுவதற்கு இலகுவானவைகள். ஆனால் செயற்படுத்துகையில் பலவிதமான நடைமுறைச்சிக்கல்களை நாம் ஒவ்வொருவரும் சந்திப்போம் என்பதில் ஐயமில்லை. அவற்றை எல்லாம் தகர்த்தெறிந்து தேசக்கடமை செய்வதற்கான பலத்தை திடத்தை, வளத்தை, மாவீரர்கள் என்னும் மாபெரும் உன்னத மனிதர்களை நினைக்கும் பொழுதெல்லாம் நாம் பெறுவோம். உயிர் கொடுத்து எங்கள் உயிர் காத்த மாவீரர்களுக்கு அவர்கள் அடைவதற்குத் துடித்த தமிழீழத் தேச விடுதலையை தமிழீழ மக்கள் விரைவில் பெறுவதற்கு நாம் உழைப்பது ஒன்றே நாம் செய்யும் வீரவணக்கத்தினை அர்த்தமுள்ளதாக்கும். ❖

## சிறிலங்கா மீது ஐ.எம்.எவ்....

தயாராவதற்கான முன் நடவடிக்கைகளில் இறங்கி வருவதை எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் கருது கின்றனர். நவீன ஏவுகணைகளை தனது படைகளுக்கு வாங்கிக் கொடுக்க சிறிலங்கா முயற்சிப்பதாக கொழும்புச் செய்திகள் சில தெரிவிக்கின்றன. இதற்கிடை சிறில ங்காவுக்கு உதவி வழங்கும் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) பிரதிநிதி 99ம் ஆண்டுக்கான சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார். இராணுவ நிதி ஒதுக் கீடுகள் குறைக்கப்பட வில்லை என்றும் துண்டு விழும் தொகையை ஈடு செய் யக் கூடிய முன்னேற்ற கரமான திட்டங்கள் எதுவும் அதில் இல் லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவின் எதிர்க் கட்சி மட்டுமல்லாது அரசாங்கத்திற்கு ஆத ரவு வழங்கும் கட்சி கள் கூட இந் 99ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறி த்து அதிருப்தி தெரி வித்துள்ளதாகவும் பல சிங்கள சமூக அமை ப்புக்களும் இவ் வரவு செலவு திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ள்ளன எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பேசுவது சிவில் நிர்வாகம்....

கால அவகாசம் அளித்து சட்டத்தையும் நீதியையும் சாக் கடையில் தூக்கி வீசியுள்ள சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தற்போது யாழ்குடா நாட்டின் இராணுவத் தளபதியையே வடக்கு கிழக்கின் ஆளுநராக நியமித்து ள்ளமை உத்தியோக பூர்வமற்ற முறையிலான இராணுவ ஆட்சிப் பிரகடனத்திற்கு சமமான செயல் என்ற பலத்த அச்சமும் ஆத்திரமும் தமிழர்களிடை தோன்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை வடக்கு கிழக்கின் சிறிலங்காவின் ஆளுநராக கடமையாற்றி அதனை இராஜினாமா செய்துள்ள திரு. காமினி பொன்சேகா சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கு குறித்து அறிவிப்பது ஒன்று ஆனால் நடைமுறையில் அங்கு செயற்படுத்துவதோ வேறொன்று எனத் தெரிவித்து ள்ளார். சிறிலங்கா அரசாங்கத்தால் வெளியிடப்படும் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி மற்றும் நிவாரணம் போன்ற அறிவிப்புக்கள் அறிவிப்பு மட்டத்திலேயே நின்று விடும். செயலளவில் எதுவுமே நடை பெறுதில்லை என ஆணித்தரமாக எடுத்து விளக்கியுள்ளார்.

வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு எனவும் வடக்கு கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கு எனவும் சர்வதேச அமைப்புக்களிடமும் நாடுகளிடமும் நிதி உதவிகள் பெற்று வருவது உலகறிந்த விடயம். இந்த நிதியளிப்புக்கள் தமிழ் மக்களுக்கு உதவ அல்ல அவர்களை இன அழிப்பு யுத்தத்தினால் அழிப்பதற்கே பயன்படுகிறது எனப் புலம் பெயர் தமிழர்கள் பலமுறை பலவிடங்களில் எடுத்துக் கூறி வருகின்றனர். அதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் வடக்கு கிழக்குக்கான சிறிலங்காவின் முன்னாள் ஆளுநர் காமினி பொன்சேகா சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கில் நடாத்தும் கூட நாடகத்தை உலகிற்கு அம்பலமாக்கியுள்ளார்.

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழ் மக்களது வரலாற்றுத் தாயக பூமியில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை நடாத்தி தமிழ் மக்களது நிலங்களைச் சிங்களமயப்படுத்துவதுடன் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தையும் மாற்றி தமிழ் மக்களை அரசியல் அனாதைகளாக்கி அவர்கள் மேல் தாம் நினைத்த அரசியல் அடக்கு முறைகளை ஒடுக்குமுறைகளை திணித்து அவர்களை அவர்களது தாயக பூமியிலேயே இரண்டாந்தர பிரஜைகளாக நாடற்றவர்களாக மாற்றிவருகின்றது. இதனை நியாயப் படுத்தக் கூடிய வகையிலேயே சிறி லங்கா ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் தென்ஆபிரிக்காவில் – சிறிலங்கா சிறுபான்மைக் கூட்டமே பிரிவினை கோருகின்றது அத்துடன் அவர்கள் நாட்டிற்குச் சொந்தக் காரர்கள் கூட இல்லை எனப் பேட்டியளித்தார். தற்போது தனது கருத்தினை வேகமாக நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் சிங்களக் குடியேற்றங்களைத் தமிழ்ப் பகுதிகளில் நிறுவுவதில் கைதேர்ந்தவரான மேஜர் ஜெனரல் அசோக்கா ஜயவர்த்தனாவை வடக்கு கிழக்கிற்கான சிறிலங்காவின் ஆளுநராக நிய மித்துள்ளார்.



# சிறிலங்காவில் தமிழரின் மனிதஉரிமை பற்றிய தற்போதைய நிலை

**திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்**

> பெல்ஜியம் பிறஸெல்ஸில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற அங்கத்தினர் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துள் அடங்கிய தென்னாசிய தூதுக்குழுவின் தலைவி உயர்தகு அனிதா பொலாக், ஐ. நா. உ., தலைமையில் 14.10.98 அன்று அகில இலங்கைத் தமிழக காங்கிரஸின் பொதுச்செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரை. சிறிலங்காத் தீவின் பத்திரிகைத் தணிக்கையும் மனித உரிமைகள் நிலைபாடும் என்ற விடயமே கூட்டத்தின் கருப் பொருளாக இருந்தது

சிறிலங்காவில் தமிழரின் மனித உரிமை நிலை கடந்த பதினைந்து ஆண்டுகளில் இருந்தது போலவே இன்றும் மிக மோசமான நிலையில் உள்ளது. 1994 ஆகஸ்ட் மாதத்தில் தற்போதைய அரசு பதவிக்கு வந்தபின், உள்நாட்டு – வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களின் இருட்டடிப்பு மறைவில், மனித உரிமை மீறல் பல இணைக்கப்பட்டும் நடாத்தப்பட்டும் வருவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இவ்வரசாங்கம் 1994 ஆகஸ்டில் பதவிக்கு வந்த பின்னர், மனித உரிமை நிலமைகள் பற்றி அவதானித்த விடயங்களை மட்டுமே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான ஒரு பொதுப் பிரஜையாக மாத்திரம் நினைத்து, அதனால் தமிழர்களின் மனித உரிமைகளில் ஆழ்ந்த கவலைகொண்டு, அவ்விடயம்பற்றி இன்று நான் பேச வில்லை. அவசரகாலச் சட்டங்களினதும் பயங்கரவாதச் சட்டங்களினதும் கீழ் சிக்கித்தவிக்கும் அரசியல் கைதிகளான எம்மக்களின் சுமார் 95 வீதமான வழக்குகளில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு, அவர்களுக்காக வாதாடி மனித உரிமைகளின் துஷ்பிரயோகத்தைப் பகிரங்கப்படுத்தும் ஒரு குற்றவியல் சட்டத்தரணியாகவும் பேச வந்திருக்கிறேன்.

தமிழர்களுடைய மனித உரிமைகளின் நிலமை இன்று எவ்வாறு உள்ளனவோ அவ்வாறே கீழ் காணும் தலைப்புகளின் கீழ் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன் : –

1. பத்திரிகைத் தணிக்கை
2. கண்மூடித்தனமான கைதுகள்
3. காலவரையின்றித்தடுத்து வைத்தல்
4. சித்திரவதை
5. பாலியல் வல்லுறவு
6. சட்டவரம்பை மீறிய கொலைகள்
7. காணாமற் போதல்

மேற்படி விடயங்களை ஆராயும்போது அங்கே பத்திரிகைத் தணிக்கை மட்டுமல்லாது பரம்பரை பரம்பரையாக வந்த தமிழர் வதிவிடங்களான சிறிலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணங்களான தமிழீழத்தில், சிறிலங்கா அரசு தமிழருக்கெதிரான ஒரு பெரும் போரையே நடாத்திக்கொண்டிருக்கிற தென்ற உண்மையையும் எவரும் கவனிக்கத் தவறி விடக்கூடாது. வேறு வகையில் கூறுவதானால் தன் நாட்டுப் பிரஜைகளாக இன்னமும் இருக்கும் தமிழர்மீது பத்திரிகைத் தணிக்கை என்ற திரைமறைவில் செய்தித்தடைகள் மூலம் சாட்சியங்கள் பெற முடியா வகையில் நியாயமான ஒரு போரையே நடாத்திக் கொண்டிருக்கிறது. நிலமைகள் இப்படி இருக்குமாயின் அத்துமீறல்களின் கோரம் எவ்வாறு இருக்கும் என எவராலும் கற்பனை பண்ணிப்பார்க்க முடியும்.

### பத்திரிகைத் தணிக்கை

தற்போதைய அரசின் ஆட்சியின் கீழ் மூன்று தடவைகளில் செய்தி ஊடகத் தணிக்கைகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது– சரியாக ரிவிரெச என்ற இராணுவ நடவடிக்கைக் காலத்தோடு ஒன்றிய அக்டோபர் 1995 முதல் டிசெம்பர் 1995 வரை. இரண்டாவது– முல்லைச்சமரில் ஏற்பட்ட படு தோல்வியை மூடி மறைக்கு முகமாக யூலை 1996 முதல் டிசெம்பர் 1996 வரை. மூன்றாவது– யூன் 1998 முதல் இன்றுவரை. தணிக்கைகளுக்கெதிரான சர்வதேச மையம் தனது அறிக்கையின் சரத்து 19ல் குறிப்பட்டது போல் சிறிலங்காச் சமுதாயம் தற்போது தணிக்கைப் பிடியில் சிக்கியுள்ளது.

பத்திரிகைத் தணிக்கை பற்றி ஆராயுமிடத்து செய்திகள் யாவற்றையும் அறியும் உரிமையுடன் நோக்குவது அவசியமாகிறது. அந்த உரிமைதான் சிறிலங்கா அரசியல் அடிப்படை யாப்பியலில் இல்லையே. புத்திரிகைத் தணிக்கைத் திரைமறைவிலே தான் நடாத்திவரும் படு மோசமான மனித உரிமை மீறல்களின் அறிக்கைகள் பற்றி நன்றாகவே தெரிந்திருக்கும். சிறிலங்கா அரசு இவ்விடயங்கள் பற்றி வெளியுலகிற்கு எடுத்துக்காட்டும் போது உண்மையிலே சிறிலங்காவில் நடப்ப தென்னவென வெளி உலகம் அறிய முற்பட்டாலும் அவைபற்றி அறிய முடியாமல் தடுக்கத் தன்னால் எவ்வளவு தூரம் போக முடியுமோ அது வரைக்கும் போக முயற்சிக்கும்.

எனது சொந்த அனுபவம் ஒன்று இதற்கு உதாரணம். ஐக்கிய நாடுகள் கமிசனின் மனித உரிமைகள் பற்றிய ஜெனிவாவில் நடைபெற்ற 53வது மகாநாட்டில் இலங்கைத் தமிழர் சார்பில் பிரதிநிதித்துவம் செய்யுமாறு பிரபலம் வாய்ந்த ஒரு தமிழ் ஸ்தாபனத்தினால் 1997 மார்ச் மாதம் எனக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதற்காக சிறிலங்கா சர்வதேச விமான நிலையத்தில் நான் புறப்பட இருந்த சமயம் சுங்க அதிகாரிகள், பொலிஸ் படை ஒன்று வந்து சிறிதேனும் வெட்கமின்றி என்னிடம் தஸ்தா வேஜுக்கள் ஏதும் இருந்தால் அவற்றைக் கைப்பற்ற ஓர் எலியைத்தேடுவது போல் எனது உடமைகள் யாவற்றையும் தேடுதல் நடாத்தினார்கள். அற்பத்தனமான சதி வேலைகளில் ஈடுபடக்கூடிய மட்டரகமான அரசைப்பற்றித் தெரிந்த, சிறிதளவேனும் நுண்ணறிவுள்ள எவரும் அப்படிப்பட்ட முக்கியமான தஸ்தா வேஜுக்களை வேறு வழியில் அனுப்பி வைத்திருப்பாரென்று ஊகிக்க அவர்களுக்குப் புத்தி வரவில்லை. அதைத்தான் நான் அப்போதும் என் இத்தருணத்திலும் செய்தேன். அன்று எனக்கு இழைத்த அநீதிக்கு, பின்னால் குறிப்பிட்டபடி சர்வதேச மன்னிப்புச்சபையிடமிருந்து காரமான எதிரொலி கிடைத்தது.

மிக அண்மையில் நடந்த இன்னொரு சம்பவமும் ஓர் உதாரணம். அரசாங்க ஆங்கிலப் பத்திரிகையான த டெயிலி நியூஸ் 1998 செப்டெம்பர் 28ம் திகதிய பதிப்பின் முன் பக்கத்தில் சிறிலங்காப் போரிலே முதன் நாள் (27ம் திகதி) ஒன்பது இராணுவத்தினர் கொல்லப் பட்டார்கள் என முக்கிய செய்தியாகப் பிரசுரித்திருக்க அதன் சகோதர தமிழ்ப் பத்திரிகையான தினகரன் அதே திகதிப் பதிப்பில் முன் பக்கத்தில் இரு இடங்களில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனப் பிரசுரித்திருந்தது. தணிக்கையோடு கூடிய அரசாங்க செய்தி ஊடகத்தில் கூட இப்படியான தமாசான நிலமை நிலவுகின்றது.

என்ன நடக்கிறது என நேரிலே கண்டு அறிக்கைகள் தயாரிப்பதற்கு வடக்கே செல்ல எந்தச்சமயத்திலும் நிருபர்களுக்கு அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசு தனது மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கும் முயற்சியில் தவறானதும் பொய்யானதுமான செய்திகளைப் பலமுறை வெளியிடுகிறது. புத்திரிகைத்தணிக்கை அமுலில் இருக்கும் அதே வேளையில் எவற்றைப் பார்க்கலாம் என விரும்புகிறதோ அவற்றைப்பார்க்கவும் எவற்றைப் பார்ப்பவர் கேட்க வேண்டுமென்று விரும்புகிறதோ அவற்றைக் கேட்கவும் கூடியதாக போர்ப்பகுதியான வடக்கு கிழக்கில் மேடைகளைத்தயார் செய்து அந்த இடங்களுக்கு தலைநகரிலுள்ள வெளிநாட்டுத் தூதரகக் குழுக்களையும் பத்திரிகை நிருபர்களையும் வழிகாட்டிச் சுற்றுலா வகையில் அரசு அழைத்துச் செல்கிறது. வேறு விதமாகக் கூறுவதாயின் செய்திகளைத் தடை செய்வதாலும் அல்லது அவற்றைத் தனக்குச் சாதகமாகத் திரித்துக் கூறுவதாலும் தனது இன அழிப்புக்குற்ற விகிதத்தில் கணக்கிடக்கூடிய அத்து மீறல்களிலிருந்து தப்பிக்கும் முயற்சியில் ஒரு நாடு எவ்வாறு வெற்றி பெறலாம் என்பதற்கு சிறிலங்கா ஒரு மகத்தான எடுத்துக்காட்டாகும்.



ஒரு புறம் வெளிநாட்டு நிருபர்கள் செல்ல அனுமதிக்கப் படாத நாட்டின் ஒரு பகுதியில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மறு புறம் சிறிலங்கா அரசு சர்வதேச செய்தி ஊடகங்களுக்குப் பணி புரியும் சிங்கள நிருபர்களுக்கு போர் நிலை பற்றிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிருபர்களும் விசுவாசத்துடன் அத்தகவல்களை வெளி உலகிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

லண்டனைத் தளமாகக் கொண்டு சிறிலங்காவில் இயங்கி வந்த பீஸ் பிறிகேட் இன்டர்நாசனல் என்ற மனித உரிமைச் செயற்குழு மனித உரிமை பற்றிய விடயங்களைப் பகிரங்கப் படுத்துவதில் அதன் மீது திணிக்கப்பட்ட தடை அழுத்தங்களினால் நிலை விட்டே வெளியேறி விட்டது. மோசமாகச் சண்டை நடந்து கொண்டிருந்த கிழக்குப் பகுதிக்குச் செல்லத் தடங்கல்களை உருவாக்கிய முறைகளைப்பற்றியும் இக்குழு அரசிடம் புகார் செய்துள்ளது.

பத்திரிகைத் தணிக்கை முற்று முழுதாக நீக்கப்பட்டால் உயிரைப்பற்றிய பயம், பொருள் நட்டயம் இவை ஓரளவுக்குக் குறையலாமென நாம் நம்புகிறோம். நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரின் காரணமாகவோ, தேசிய பாதுகாப்பின் சட்டத் தேவைகட்காகவோ அன்றி பொதுசன ஒழுங்குக்காகவென்றோ செய்திகளை அறிவதற்கான உரிமையைக் கட்டுப்படுத்துவது நியாயமாகாது என நாம் உணர்கிறோம்.

### கண்மூடித்தனமான கைதுகள்

பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து வந்த வதிவிடங்களான சிறிலங்காத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் – இவை போர் நிகழும் பகுதிகளாக இருக்கின்ற போதும் – கண்மூடித்தனமான கைதுகள் இன்றும் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. அப்படி நடைபெறும் கைதுகளைப்பற்றிய தகவல்கள் சகலவிதமான தஸ்தா வேஜுக்களையும் வைத்திருக்கும் கொழும்பினூடாகவே சிறிது சிறிதாக வெளிவருகிறது.

தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் இருக்கும் சிங்கள இராணுவம் இரவு நேரங்களிலேதான் தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்கிறது. வெளிப்படையான காரணங்களுக்காக பெற்றோர் இதைத் தடுக்க முடியாமல் இருக்கின்றனர்.

கண்மூடித்தனமான கைதெனத் தெளிவாக விளக்கும் ஒருசம்பவம். வரணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மகேந்திரன் பிரபாகரன் என்ற மாணவன் 1997 டிசெம்பர் 11ம் திகதியன்று பொதுத்தராதர சாதாரண பரீட்சை எழுத இருந்தான். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வரணியில் இந்த மாணவன் பரீட்சை மண்டபத்திற்குச் செல்லும் வழியில் தடைமுகாம் ஒன்றில் வைத்து அவனுடைய அடையாள அட்டை சோதிக்கப்பட்டது. எல். ரீ. ரீ. ஈ யின் தலைவருடைய பெயரும் இம் மாணவனுடைய பெயரும் ஒன்றாக இருந்த ஒரே காரணத்துக்காக அவன் கைது செய்யப்பட்டான். பரீட்சை எழுத முடியாமற் போய்விட்டது. அங்கே என்ன நடக்கிறது என்பதைக்காட்ட இது ஒரு சிறு உதாரணம்.

அடுத்தாற் போல் மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் என்னுமிடத்தில் இருந்து எம். எஸ். வேலாயுதம் என்பவருடைய ஒரு வழக்கு. 1997 மார்ச் மாதம் முதலாம் திகதி தன் வீட்டிலிருந்து சுமார் 200 மைல் தூரத்தில் உள்ள பதுளை நீதி மன்றத்துக்கு ஒரு வழக்குக்காகப் போயிருக்கிறார். 200 மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள ஒருவர் எவ்வாறு அங்கே காணப்பட்டார் என விளங்கிக்

தொடர்ச்சி 15ம் பக்கம்...

# வன்னியில் மாபெரும் பேரணி

## ஐ.நா.செயலாளருக்கும் உலக உணவுத் திட்ட செயலாளருக்கும் தனித்தனி மகஜர்

நீரும் அருந்தா உண்ணாவிரதப் போரட்டதிற்குப் பலன் எதுவும் இல்லை, சுயநி ர்ணய உரிமையை நிலை நாட்டுவதே ஒரே வழி என மக்கள் ஐ. நா. வுக்குப் பகிரங்க அறிவிப்பு



சந்திரிகா அரசாங்கத்தின் நிவாரண வெட்டுக்களை எதிர்த்து வன்னியில் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்தி வரும் பொது மக்கள் தமது பட்டினிச் சாவு நிலையை எடுத்துக்காட்டி உடன் நிவாரணம் வழங்குமாறு கோரி பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை வன்னியில் நடாத்தியுள்ளனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப் பேரணியில் சந்திரிகா அரசாங்கத்தின் நிவாரண வெட்டுக்களைக் கண்டித்து பலத்த கண்டனக் கோசங்களை எழுப்பிச் சென்றனர். உணவு நிவாரண வெட்டின் கொடுமைகளைச் சித்தரிக்க கூடிய வகையில் பதாதைகளையும் அட்டைகளையும் மக்கள் பேரணியில் எடுத்துச் சென்றனர். இப்



பேரணியின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும் உலக உணவுத் திட்ட செயலாளருக்கும் தனித்தனி மகஜர்கள் ஊர்வலத்தினரால் கையளிக்கப்பட்டன.இவ்வறிக்கையில் இலங்கையின் வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டு ள்ள நெருக்கடி நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை கொஞ்சம் கூட கவனம் எடுக்காமைக்கு கவலை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், நிவாரண வெட்டால் அதிகரிக்கும் சிசு மரண வீதங்கள் குறித்தும் சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் போசாக்கின்மையினால் மக்கள் அடைந்து வரும் பாதிப்புக்கள் என்பன விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது. நிவாரண வெட்டினைக் கண்டித்து நீர் கூட அருந்தாது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நடாத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தகுந்த பலன் எதுவும் கிடைக்காத நிலையில் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவதை முன்னெடுப்பதே தங்களுக்கு உள்ள ஒரே வழியாக உள்ளது எனவும் மக்கள் தமது முடிவை ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரிவித்துள்ளனர்.



# இலண்டனில் விழிப்புப் போராட்டம்

## கவலைக்கிடமாகி வரும் வன்னி மக்களின் நிலை - 9வது வாரமாக இலண்டனில் சுழற்சிமுறை விழிப்புப் போராட்டம்.

தமிழீழப் பகுதிகள் மீதான சிறிலங்கா அரசின் திட்டமிட்ட உணவு, நிவாரண வெட்டால் வன்னியில் உள்ள மக்களின் நிலை கவலைக்கிடமாக மாறிவருகின்றது. அரச படையினரின் தொடர் இராணுவ நடவடிக்கைகள், விமானக் குண்டு வீச்சுகள், ஆட்டிலெறித் தாக்குதல்கள் காரணமாக தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து தொழில் வாய்ப்புகள் ஏதுமின்றி நிவாரண உதவிகளை மட்டுமே நம்பியிருந்த மக்களின் வயிற்றில் அடிப்பது போன்றே அரசின் நடவடிக்கை அமைந்துள்ளது. 73 நாட்களுக்கு மேலாக அரசின் இந்த நிவாரண வெட்டை நீக்கக் கோரி வன்னியில் மக்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கும் முன், அரசாங்க செயலகங்கள், தொண்டர் நிறுவனங்களின் பணிமனைகள் முன் மறியல் போராட்டங்களையும், விழிப்புப் போராட்டங்களையும் மக்கள் நடாத்தினர். மேலும் ஆங்காங்கே கண்டன எதிர்ப்புப் பேரணிகளும் மேற் கொள்ளப்பட்டன. ஆயினும் மக்களின் சாத்வீக போராட்டம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. கடந்த வாரம் கூட வன்னியில் பாரிய கண்டனப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

ஏற்கனவே கடந்த எட்டு வருடங்களாக பொருளாதாரத் தடை அமுலில் இருக்கையில் இந்த நிவாரண வெட்டு வெந்த புண்ணில் வேல் பாச்சுவதுபோல் உள்ளது.

மற்றுமொரு எதியோப்பியா வன்னியில் உருவாகி வருவதாக தொண்டர் நிறுவனங்கள், சமூகவியலாளர்கள் எச்சரித்துள்ளபோதும், இந்த எச்சரிக்கையை அரசு உதாசீனப்படுத்தி வருகின்றது. இதன் விளைவே மாரிமழை, வெள்ளம், நுளம்புகடிக்கு மத்தியில் போதிய ஊட்டச் சத்துகள் இன்றி குழந்தைகளும் கர்ப்பிணிப் பெண்களும், இளம் தாய்மார்களும் எதிர்நோக்கி வரும் மனித அவலமாகும். உலகின் கண்களுக்கு எம் சொந்தங்களின் உண்மை நிலையை வெளிக்கொணர தமிழர் மனித உரிமைகள் மையமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து இன்றுடன் 9வது வாரமாக இலண்டனில் சுழற்சிமுறை விழிப்புப்போராட்டத்தை நடாத்தியுள்ளன.

13.11.98 வெள்ளிக்கிழமை பிரித்தானிய பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் முன்னால் விழிப்புப் போராட்டம் நடைபெற்றது. நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பித்த போராட்டம் மாலை 5.00 மணிவரை தொடர்ந்தது. உலகை உலுக்கிய எதியோப்பியா, சூடான், சோமாலியாவில் ஏற்பட்ட மனித அவலம் தமிழீழத்திலும் ஏற்படுவது தடுக்கப்படல் வேண்டும், மக்களுக்கான உணவு வகைகள் சென்றடைவதற்கு உடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த சுழற்சிமுறை விழிப்புப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெறும். அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தின் பிரித்தானிய செயலகம் முன் விழிப்புப் போராட்டம் நடைபெறும். ❁

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சமாதானம் என்பது சம தானம்! சரணாகதியல்ல!!

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதாம் ஆண்டும், இனஅழிப்பு யுத்தத்தை தீவிரமாய் மேற்கொள்வது என்று சமரசத்திற்கிடமில்லாதவகையில், சந்திரிகாஅரசு முடிவுசெய்திருப்பதை, புதியவரவு செலவுத்திட்டம் வெளிப்படுத்தியுள்ளது. யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையும், யுத்தத்திற்காக பொதுமக்களிடம் இருந்து அறவிடப்படும் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வரவுசெலவுத்திட்டம் குறித்து, எதிர்க்கட்சியும், ஆளும்கட்சிக்கு



ஆதரவு வழங்குகின்ற தமிழ்க் குழுக்களும் சந்தேகம் இல்லாமல், யுத்தத்திற்கான வரவுசெலவுத்திட்டமே இது என்பதில் ஒத்தகருத்தில் இருக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், இனஅழிப்புக்கான பட்ஜெட் என்று வெளியரங்கமாகவே கருத்துச் சொல்லுகின்ற தமிழ்க்குழுக்கள், இந்த வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது குறித்து, உடன் முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுகின்றன என்பது தான். ஆதரவுவழங்குவதா இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் முடிவுசெய்யவேண்டும் என, அவை அறிக்கை வெளியிட்டன. இது அவர்களது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவிடயம் என்பதால், யோசித்து முடிவெடுக்க அவைக்கு காலஅவகாசம் தேவைப்படுகின்றதுபோலும்.

ஆக, சந்திரிகா அடுத்த ஆண்டும் யுத்தத்தையே தலைமை தாங்கி நடத்தப்போகின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. கிளிநொச்சிப் பெருந்தோல்விக்குப் பின்னர், கட்டளையதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுவருகின்றன. அதேவேளை, யாழ்ப்பாணத்தில் கொடியேற்றிய சிங்களத்து மாவீரன் ரத்வத்தை, கிளிநொச்சியில் தளபதி விதுசா புலிக்கொடி ஏற்றிவைத்த செய்தியறிந்ததும் வாலைச் சுருட்டிக் கொண்டுள்ளார்போலும். சிங்களத்தின் அடுத்தபிரதமருக்கு முன் மொழியப்பட்ட ரத்வத்தை, சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவை தன தாக்கிக்கொண்ட இனவெறிச் சண்டியன், தற்போது களையிழந்து போயுள்ளார். தன்னை மிஞ்சி சிங்களவெகுசனத்தின் ஆதரவைத் திரட்டிக்கொண்டுவிடுவாரோ ரத்வத்தை எனப்பயந்த சந்திரிகாவிற்கு, கிளிநொச்சி இழப்பு ஒரு சாதகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தத் தோல்வியையே காரணமாய்க்கொண்டு, ரத்வத்தையை சிறிதுசிறிதாக ஓரங் கட்டுவது சந்திரிகாவிற்கு வாய்க்கப் பெற்ற வரமே.

கூட்டுப்படைத் தலைமையகத்தின், முழுக்கட்டுப்பாட்டையும் தன்வசம் வைத்துள்ள சந்திரிகா, இராணுவத் தளபதிகள் மட்டத்தில் தன்விருப்பிற்கு ஏற்ப மாற்றங்களைச் செய்து வருகின்றார். ஜெயசிக்குறுவின் அடுத்த நகர்வு, சந்திரிகாவின் முக்கிய பங்குபற்றுதலுடன் அமையும் என்றே கருதப்படுகின்றது. இதற்கிடையில், காமினி பொன்சேகாவின் இராஜினாமாவிற்குப் பின், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக, யாழ்குடாவிற்கு பொறுப்பாக சில தினங்களிற்கு முன்னரேயே நியமிக்கப்பட்ட அசோகா ஜெயவர்த்தனாவை சந்திரிகா நியமித்துள்ளார். புதிய ஆளுநர் பதவியைக் கையேற்க, யாழ்குடாவிற்கான இராணுவக் கட்டளையதிகாரி என்ற தனது பதவியை அவர் துறந்துள்ளார். என்றபோதும், இராணுவ அதிகாரிக்குரிய அதேபாணியில், ஆளுநர் என்ற பெயரில் ஒரு இராணுவ அதிகாரியாகவே வடக்குகிழக்கு மாகாணத்தில் அவர் பணிபுரியப் போகின்றார்.

இதன்மூலம் மக்கள் தமது தேவைகளை எடுத்துச் சொல்லவோ, தமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவோ முடியாதபடி, ஒரு இராணுவத் திரை, விரிக்கப் பட்டிருக்கின்றது. முரட்டுத்தனமான இறுக்கமான, இராணுவப்பிடிக்குள் இருக்கின்றோம் என்ற உணர்வை, சதா மக்களுக்கு உணர்த்தும் போக்கே நீடிக்கின்றது. அவர்களின் இயல்பான போக்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவுவரை கட்டிப்போடுவதே சந்திரிகாவின் திட்டமாக உள்ளது.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி நான்காம் ஆண்டு, தேர்தலில் வென்று, வரலாற்றில் முதல் தடவையாக, இராணுவப் படைப் பிரிவில் முன்னர் கடமை புரிந்த ரத்வத்தையை, சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சராக சந்திரிகா நியமித்ததில் இருந்து, இராணுவத் தீர்வுக்கான முதல்விதை நாட்டப் பட்டது.

சமாதானத்திற்கான திட்டம் தன்னிடம் உண்டென சந்திரிகா இதுநாள்வரை சொல்லிக்கொள்ளுகின்றபோதும், இராணுவத்திட்டமே அவரிடம் இருக்கின்ற ஒரேயொரு திட்டம் என்பதை அவரது ஒவ்வொரு நகர்வுகளும் வெளிப்படுத்துகின்றன.

அன்று ரத்வத்தையில் தொடங்கிய, இந்த இராணுவத்தனமான நகர்வு, இன்று, ஆளுநரை நியமிப்பது வரை வந்துள்ளது. அடுத்ததாக, அரசாங்க அதிபர்வரை அது நீளக்கூடும்.

இனஅழிப்புக்கான சந்திரிகாவின் இராணுவத்திட்டம், இன்னும் இன்னும் மெருகேற்றப்பட்டு வருகின்ற இந்த நிலையில், கடந்தவாரம், சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் குறித்த செய்திகள் பலமாக அடிபட்டன. பிரித்தானிய அரசு இதில் ஈடுபடுவதாகவும் செய்திகள் வெளிவந்தன. தென்னாசிய விவகாரங்களைக் கவனிக்கும் பிரித்தானிய வெளிவிவகார துணைஅமைச்சர் கொழும்பு சென்றதற்கும் இதற்கும் முடிச்சுப்போட்டு செய்திகள் வந்தன. கொழும்பு சென்ற அவரும், சமாதானத்திற்கு மத்தியத்துவம் வகிக்கும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இதேவேளை, அண்மையில் கொழும்பு சென்ற, இந்தியாவிற்கான தென்னாபிரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இராஜதந்திரி, மத்தியத்துவம் வகிப்பதற்கு தென்னாபிரிக்க அரசிற்கு இருக்கக்கூடிய விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆக, சர்வதேசம் இலங்கை இனப்பிரச்சினையில், மத்தியத்துவம் வகித்து புரையோடிப்போயுள்ள கடினமானதும் நீண்டதுமான இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விருப்பம் தெரிவிக்கின்றன. இருதரப்பும் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில், மத்தியத்துவப் பாத்திரத்தை வகிக்க தாம் தயாராக இருப்பதாக அவை வெளியரங்கமாகவே தெரிவிக்கின்றன.

ஆனால், விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்காவில் ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர் எனவும், தென்னாபிரிக்காவில் இருந்து உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்கின்றனர் எனவும், பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் பெருந்தொகைப் பணத்தை சேகரிக்கின்றனர், அவர்களின் செயற்பாடுகளை [illegible] அலுவலகத்தை மூடுமாறும் பிரித்தானியாவையும் தென்னாபிரிக்காவையும் சதா கிண்டிவிடும் சிறீலங்கா, மேற்படி நாடுகள் வெளிப்படுத்தும் சமாதான ஆர்வங்களால், நிட்சயமாக சந்தோசம் கொள்ளப்போவதில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தைமூலமே சாத்தியம் என்பதை ஒப்புக்கொள்ளும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, அப்பேச்சுவார்த்தை மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுவதை விரும்பவில்லை. இடைத்தரகர் ஒருவரின் உதவியே சந்திரிகா அரசிற்குத் தேவைப்படுகின்றது. மத்தியஸ்தரல்ல. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி, தமிழ்மக்களின் தேசியக்குரலை அடக்கி, அவர்களின் போராட்ட சக்தியை ஒடுக்கி, அதன்பின்னர் ஒருதீர்வைத் திணிப்பதே திட்டம் என்பது யாவரும் அறிந்ததே.

சர்வதேச மத்தியத்துவத்துடன் பிரச்சினையை அலசி ஆய்ந்து தீர்வுக்கான திட்டத்தை வகுத்துக்கொள்வது சிறீலங்காவிற்கு பெரும் ஆபத்தாக முடிந்துவிடும் என, சிறீலங்கா அரசு அச்சப்படுகின்றது. சர்வதேச மத்தியத்துவத்தை அனுமதிப்பதன் மூலம், நவீன உலகஅரசியல் போக்கில், தமிழ்த் தேசியஇனம் தன் உரிமைகளை வரையறுத்துப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திவிடும் என, சிறீலங்கா ஆட்சியாளர்கள் அச்சப்படுகின்றனர்.

அதற்குத் தோதாக, பௌத்த சிங்களப்பேரினவாத சக்திகளும், சமாதானம் பேச்சுவார்த்தை என்ற சொற்கேட்டதும் வெகுண்டெழுந்து போர்க்கோலம் கொள்ளுகின்றன. சிங்கள அரசியல் தலைமை போலியாகத்தன்னும் தெரிவிக்கும் சமாதானம் குறித்தான செய்திகளுக்கே கோபாவேசம் கொள்ளும் பௌத்த சிங்களப் பேரினவாதம் உண்மையான சமாதான முயற்சிகள் எதனையும் அனுமதிக்கப்போவதில்லை.

பிரித்தானிய வெளிவிவகார துணை அமைச்சரின் கொழும்பு வருகை, ஏதோ சமாதானத்தை உடனடியாக கொண்டு வந்து விடுமோ என்ற கலக்கத்தில் வெகுண்டெழச் செய்து, பௌத்த சிங்களப்பேரினவாதத்தை, எதிர்ப்புப்போராட்டம் நடத்தத் தூண்டியது. கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சுவரொட்டிப்போராட்டம் நடத்தினர். பிரித்தானிய அமைச்சரின் வருகையை எதிர்த்ததோடு, அவர் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு வலியுறுத்தியுமே சுவரொட்டிப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

உண்மையான சமாதானத்தை உளப்பூர்வமாக, தாகத்துடன் எதிர்பார்ப்பவர்கள் தமிழ்மக்களே. அடக்குமுறையை மேற் கொண்டபடி, தமிழ்மக்களை அடிமைகளாக வைத்திருக்க எண்ணும் பௌத்த சிங்களப் பேரினவாதம் ஒரு போதும், உண்மையான சமாதானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அது அதனை எதிர்க்கவே செய்யும். அவர்கள் விரும்பும் சமாதானம் என்பது தமிழர்கள் சரணாகதி அடைவது

> **உண்மையான சமாதானத்தை உளப் பூர்வமாக, தாகத்துடன் எதிர் பார்ப்பவர்கள் தமிழ் மக்களே. அடக்கு முறையை மேற் கொண்டபடி, தமிழ்மக்களை அடிமைகளாக வைத்திருக்க எண்ணும் பௌத்த சிங்களப் பேரினவாதம் ஒரு போதும், உண்மை யான சமாதானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அது அதனை எதிர்க்கவே செய்யும்.**

என்பதே. ஆனால் தமிழர்கள் விரும்பும் சமாதானம் என்பது, தமிழ்த்தேசிய இனமும், சிங்களத் தேசியஇனமும் சமத்துவமாக, சகலஉரிமையும் பெற்று, இலங்கைத் தீவில் வாழ்வதையே குறிக்கும். இந்த அடிப்படை விடயத்தை, சமாதானத்தை இலங்கைத்தீவில் தோற்றுவிக்க எண்ணும் வெளி நாட்டு சக்திகள் புரிந்துகொண்டு களத்தில் இறங்குவதே பொருத்தமானது.

மாறாக, யுத்தத்திற்கு பெருந்தொகை நிதியை ஒதுக்கியபடி, சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் உலகவிந்தையை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சந்திரிகா, சமாதானத்தைக் கொண்டு வர எவ்வளவோ முயன்று கொண்டிருக்கின்றார். ஆனால் புலிகள் விட்டுக் கொடுக்கின்றார்கள் இல்லை என்ற கருத்தை வெளிப்படுத்துவோர், உண்மையான சமாதான விரும்பிகளாக இருக்கமுடியாது. சந்திரிகா அரசின் விருந்தினர் ஒருவர் உதிர்த்த கருத்தாகவே அவர்களின் கருத்துக்களைக் கொள்ள முடியும். ❁

- சப்பு -

# அலையும், கலையும்!

கிளிநொச்சி— வளம் மிக்க மண். வாரி வாரி வழங்கும் தரம் பெற்ற மண். உரம்பெற்று உறுதிகொண்ட மண். தன்னை நாடி வருவோருக்கு நலம் கொடுக்கும் மண். தன்னை அகழ்ந்து பண்படுத்தும் விவசாயிக்கு வரம்கொடுக்கும் வன்னி மண். மாங்கிளியும் மரம் கொத்தியும் பறந்து திரிகின்ற வயல் வெளியும் வரம்புகளில் தலைசாய்ந்து நிறைந்து கிடக்கும் நெல் மணிகளும் நிலத்தை அழகூட்ட, இந்த அழகே கிளிநொச்சிக்கு எழிலூட்ட இதனால் மக்கள் வாழ்வில் மெருகேற மேன்மை பெற்ற மண். இயற்கையின் தற்கொடையாய் தென்னந்தோப்புக்கள் பரந்து செல்ல, இவற்றை ஊடறுத்துச் செல்லும் சாலைகள் எங்கும் தேங்காய்கள் சிதறிக் கிடக்க,

> மண்மீட்பு சார்ந்த அத்தனை மகத்துவங்களுக்கும் 'அகரமாய்' நிற்கும் மேதகு தேசியத் தலைவரின் போர்ப்பாசறையில் வளர்ந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள். இதில் ஐயம் ஒன்றுமில்லை. எதிரிக்கும் உயிர் கொடுக்கும் உயர்ந்த வள்ளலாய் நிமிர்ந்து நிற்கும் தலைவரின் செயற்பாடுகளால்தான் இன்று தமிழினமே நிமிர்ந்து நிற்கிறது. எங்களின் தலைவரின் பாதம்பட்ட கிளிநொச்சிப் பாதைகள் இனி எதிரிக்குப் பணியாது.

முக்கனிகளும் தங்கள் முகம் காட்ட, வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் மண். மாரி பொய்த்து வளம் குன்றிப் போனாலும் தங்கள் தோள்வலியால் மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு பாறை பிளந்து பயிர்விளைவிக்கும் விவசாயிகள் வாழ்வுக்கு ஊட்டமளிக்கும்



உயர்ந்த மண். பல்வகைத் தானியங்களும் விளைந்து பயிராகி பலரும் சாமையுமாய் நோய்க்கு மருந்தாகி பசிப்பிணி மருத்துவனாய் எல்லோரையும் வாழ்விக்கும் வரலாற்றுப் பெருமை கொண்ட நல்ல மண். இரணைமடு நிறைந்திருக்க அதனால் நிறைவு கொண்ட எங்கள் சொந்தமண். நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் விரிந்து செல்ல நல்ல விளைவு தரும் தாய்மண். மந்தைகள் மலிந்திருக்க பட்டிகள் நிறைந்திருக்க பூரண பொலிவுகொண்ட புகழ்படைத்த மண்.

இத்தனை பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு தன்னை நாடிவருவோருக்கு நல்ல பயன் செய்து ஓர் அட்சயபாத்திரமாய் அமுதளிக்கும் இந்தக் கிளிநொச்சி ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகி இன்று மாபெரும் வெற்றிக்களிப்போடு நிமிர்ந்து நிற்கின்றது. இந்த நிமிர்வு தனியே கிளிநொச்சிக்கான நிமிர்வு மட்டுமன்று. தமிழினத்துக்குக் கிடைத்த தலை நிமிர்வு. எங்கள் மண் யாருக்கும் பணியாது. மண்ணை மிதித்தவனை, தாய் நிலத்தை அபகரித்தவனை, சொந்த மண்ணைச் சூறையாட நினைத்தவனை, என்செய்வோம் என நிரூபித்துக் காட்டிய விடுதலைப் புலிகளின் வீரம் விளையாடிய மண்.

இந்த வீரமண்ணை மீட்டெடுத்த வெற்றி ஈழத்தமிழர்களின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மிகப்பெரிய வாகைசூடலாகும்.

சிறிலங்கா இராணுவத்தின் மனநிலையை ஆழமாகப் பாதித்து இனி என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பில் படையைவிட்டு ஓட்டமெடுக்கும் இராணுவத்தினரின் தொகையை அதிகரிக்க வைக்கும் பாரிய வெற்றியை அறிவிக்கின்ற இந்த மீட்டெடுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை உலகுக்கு நிரூபித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

மிகப்பெரிய அளவிலான படையினரையும், சர்வதேச ரீதியாகப் பெற்ற ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு கிளிநொச்சியை முற்றுகையிட்டிருந்த எதிரியைத் தமது நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல் தந்திரோபாயங்களாலும் நன்கு பயிற்றப்பட்ட போராடும் போர்த்திறனாலும் வென்றெடுத்த இந்த வீரர்களின் சாதனை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகின்றது. மேதகு தேசியத் தலைவரின் ஆற்றுப்படுத்தலில் அணிதிரண்ட புலிவீரர்கள் அணியணியாய் புறப்பட்டு ஓயாத அலைகளாய் போராடித் தமது அர்ப்பணிப்புகளால் இந்த வன்னி மண்ணை சுதந்திர பூமியாக்கியுள்ளார்கள்.

பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு
(படைச்செருக்கு 773) என்பது ஒரு குறளாகும்.

பகைவர்களைக் கண்போடாது (தாட்சண்யம்) கொன்று குவிக்கும் ஒரு வீரன், அப்பகைவனுக்கு போர்க்களச் சூழலில் ஏதாவது ஒன்று நேர்ந்த சந்தர்ப்பத்தில் ஒரு கணமும் தாமதிக்காது தானே உபகாரியாய் மாறுகிறான். இது வீரனுக்குரிய உயர்ந்த பண்பாகும். வீரத்தின் சிகரம் இந்தச் செயல். அந்த வீரனுடைய பேராண்மைத் தன்மைக்குரிய கூர்மையாக அமையக்கூடிய இச்செயல் போற்றுதற்குரியதாகும் என்பதே மேற்கூறப்பட்ட குறளின் கருத்தாகும்.

இக்குறளின் கருத்துக்கு அமைந்து



வருவதைப் போன்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடானது ஒவ்வொரு படைமுகாம் தகர்ப்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மனிதத்தைக் கொன்று நரபலி கொள்ளும் எதிரி [illegible]போது அவர்களுக்குப் [illegible] அளித்து அவர்களை விடுதலை செய்த சம்பவங்கள் ஏராளமாகவே நடைபெற்றுள்ளன. போரிலே மரணமைந்த அந்நிய இராணுவத்தினரின் உடல்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்து தங்களது மனிதாபிமானப் பண்பையும் பேராண்மையையும் மட்டுமல்ல நாங்கள் ஊராண்மையும் நிறைந்தவர்கள் என்பதையும் தங்களது செய்கையால் நிலைநாட்டியுள்ளார்கள்.

கிளிநொச்சி நகரின் மீட்டெடுப்பின் பின்பும் இத்தகைய ஊராண்மை நிறைந்த கையளிப்பை எங்களது விடுதலை வீரர்கள் செய்து முடித்தார்கள். ஆயிரமாயிரமாய் மரணித்த அந்நிய இராணுவத்தின் உடல்களை எடுத்து ஒப்படைப்பது என்பதே சிரமமான ஒரு பணியாகிலும் மனிதப் பண்பு நிறைந்த இந்த வீரர்கள், வீரனுக்குரிய இயல்போடு இந்தப் பணியையும் நிறைவேற்றி முடித்தார்கள்.

மண்மீட்பு சார்ந்த அத்தனை மகத்துவங்களுக்கும் 'அகரமாய்' நிற்கும் மேதகு தேசியத் தலைவரின் போர்ப்பாசறையில் வளர்ந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள். இதில் ஐயம் ஒன்றுமில்லை. எதிரிக்கும் உயிர் கொடுக்கும் உயர்ந்த வள்ளலாய் நிமிர்ந்து நிற்கும் தலைவரின் செயற்பாடுகளால்தான் இன்று தமிழினமே நிமிர்ந்து நிற்கிறது. எங்களின் தலைவரின் பாதம்பட்ட கிளிநொச்சிப் பாதைகள் இனி எதிரிக்குப் பணியாது.

அடிக்குமேல் அடியென்று அடுத்தடுத்து நடைபெறும் பின்னடைவுகளால் உள்ளுக்குள் உடைந்த பாரிய பல உடைவுகளோடு 'படை' என்கு நிலைத்திருக்கும் இராணுவத்தினருக்குப் பெரும் தலைவிதியாய் இருப்பது நடந்து முடிந்த வரலாற்றுச் சமர் மட்டுமன்று. நாளை எந்த முகாம் என்று தெரியாமல் நிலைதடுமாறி நடுங்கும் இவர்கள் சாவுக்குப் பயந்து ஓயாத இந்த அலையில் மூழ்கிய நடுக்கம் மாறாமல் அந்த ஈர நினைவுகளோடு குளிர்காய்ந்து சுரம் போக்க வழியின்றி குலப்பன் காய்ச்சலோடு வெடியோசையின் அதிர்வுகளை எதிர் பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள். வெடியோசையின் அதிர்வலைகள் இவர்களை வந்தடைய முன்பு ஓட்டமெடுக்கும் இவர்கள் பாயும்புலி என்றால்—

மாவீரர்களின் தற்கொடைகளால் எழுதப்படுகின்ற ஈழத்தின் வெற்றிகள் வீரவேங்கைகளின் உறுதியில் நிலை பெறுகின்றன. இந்தக் குருத்துக்கள் தங்களை அழித்து தமிழீழத் தாயகத்தைப் பெற்றுத்தர துணை நிற்கிறார்கள். இந்த மீட்டெடுப்பில் நாங்கள் இழந்த சகோதரர்களை மீளப்பெறமுடியாது. ஆனால், இந்தத் தேசபக்தர்களின் அர்ப்பணிப்புக்கள் இல்லையேல் தமிழீழ இலட்சியத்தை நிறைவு செய்யவும் முடியாது. தங்களை உருக்கி தாயகத்துக்கு ஒளி கொடுக்கத் துடிக்கும் இந்த மாவீரர்களை எங்கள் மண் ஒருபோதும் மறக்காது.

நாங்கள் சொந்தமென வாழ்ந்துவந்த நிலமும் வீடும் வளவும் எல்லாம் எதிரி தனது என்று உரிமைகொண்டாடி எங்களை ஏதிலியாய் அலையவிட்டான். இந்த அலைதலில் வீட்டுக்கு வீடாய், நிலம் மாறி நிலமாய், இடம் விட்டு இடமாய், ஊர் ஊராய் பிரதேசம் பிரதேசமாய் நாடுகடந்து நாடாய் எப்படியெல்லாமோ அலைந்து அலைந்து ஓய்ந்துபோனோம்.

ஓய்ந்துபோய் ஒதுங்க இடமின்றி நாடோடியாகி அலையும் வாழ்வுக்கு வழிதேட — நடைபெற்ற முதல் அடியாகி கிளிநொச்சி நிலம் விடிவு

**இலக்கியா**

பெற்றது. இந்த விடிதல் ஓயாத அலையாகி எதிரி எங்கெங்கு நிலைகொண்டு தனது அதிகாரத்தைக் காட்டுகிறானோ அங்கெல்லாம் உட்புகுந்து அவனை அழிக்கும். அலைக்கு மேல் அலையாய் இது ஊடுருவும். தமிழினத்தை அலைவிட்ட இராணுவத்தினரது அடாவடித்தனங்கள் அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைத்து தமிழீழத் தாயகத்தை சுதந்திர பூமியாக்கத் துடிக்கின்ற புலிவீரர்களின் திட்டமிட்ட தாக்குதலான இந்த ஓயாத அலைகள்—இதன் வெற்றியும் இனித் தொடர இருக்கின்ற அலைகளும் தமிழர்களின் அலைவைத் தடுக்கும். தடுத்து நிறுத்தும். மாறாக இந்த ஓயாத அலைகளால் சிங்களப்படை அங்கும் இங்குமாக அலையும் சிறிலங்கா அரசாங்கம் உலக நாடுகளிடம் கையேந்தி அலையும்.

இதனால் அலையும் படையாக — அலையும் அரசாக, சிங்கள ஆட்சி அலைந்து முடிவில் கலையும். அலைந்து அலைந்து படைகள் கலைய, படைப்பலம் குறையும். படைப்பல குறைவால் இராணுவ முகாம்கள் தமிழீழத்தில் இருந்து கலைக்கப்படும். இதனால் தமிழர்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். ✽

# அலையும், கலையும்!

கிளிநொச்சி— வளம் மிக்க மண். வாரி வாரி வழங்கும் தரம் பெற்ற மண். உரம்பெற்று உறுதிகொண்ட மண். தன்னை நாடி வருவோருக்கு நலம் கொடுக்கும் மண். தன்னை அகழ்ந்து பண்படுத்தும் விவசாயிக்கு வரம்கொடுக்கும் வன்னி மண். மாங்கிளியும் மரம் கொத்தியும் பறந்து திரிகின்ற வயல் வெளியும் வரம்புகளில் தலைசாய்ந்து நிறைந்து கிடக்கும் நெல் மணிகளும் நிலத்தை அழகூட்ட, இந்த அழகே கிளிநொச்சிக்கு எழிலூட்ட இதனால் மக்கள் வாழ்வில் மெருகேற மேன்மை பெற்ற மண். இயற்கையின் தற்கொடையாய் தென்னந்தோப்புக்கள் பரந்து செல்ல, இவற்றை ஊடறுத்துச் செல்லும் சாலைகள் எங்கும் தேங்காய்கள் சிதறிக் கிடக்க,

> மண்மீட்பு சார்ந்த அத்தனை மகத்துவங்களுக்கும் 'அகரமாய்' நிற்கும் மேதகு தேசியத் தலைவரின் போர்ப்பாசறையில் வளர்ந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள். இதில் ஐயம் ஒன்றுமில்லை. எதிரிக்கும் உயிர் கொடுக்கும் உயர்ந்த வள்ளலாய் நிமிர்ந்து நிற்கும் தலைவரின் செயற்பாடுகளால்தான் இன்று தமிழினமே நிமிர்ந்து நிற்கிறது. எங்களின் தலைவரின் பாதம்பட்ட கிளிநொச்சிப் பாதைகள் இனி எதிரிக்குப் பணியாது.

முக்கனிகளும் தங்கள் முகம் காட்ட, வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் மண். மாரி பொய்த்து வளம் குன்றிப் போனாலும் தங்கள் தோள்வலியால் மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு பாறை பிளந்து பயிர்விளைவிக்கும் விவசாயிகள் வாழ்வுக்கு ஊட்டமளிக்கும்



உயர்ந்த மண். பல்வகைத் தானியங்களும் விளைந்து பயிராகி பயறும் சாமையுமாய் நோய்க்கு மருந்தாகி பசிப்பிணி மருத்துவனாய் எல்லோரையும் வாழ்விக்கும் வரலாற்றுப் பெருமை கொண்ட நல்ல மண். இரணைமடு நிறைந்திருக்க அதனால் நிறைவு கொண்ட எங்கள் சொந்தமண். நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் விரிந்து செல்ல நல்ல விளைவு தரும் தாய்மண். மந்தைகள் மலிந்திருக்க பட்டிகள் நிறைந்திருக்க பூரண பொலிவுகொண்ட புகழ்படைத்த மண்.

இத்தனை பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு தன்னை நாடிவருவோருக்கு நல்ல பயன் செய்து ஓர் அட்சயபாத்திரமாய் அமுதளிக்கும் இந்தக் கிளிநொச்சி ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகி இன்று மாபெரும் வெற்றிக்களிப்போடு நிமிர்ந்து நிற்கின்றது. இந்த நிமிர்வு தனியே கிளிநொச்சிக்கான நிமிர்வு மட்டுமன்று. தமிழினத்துக்குக் கிடைத்த தலை நிமிர்வு. எங்கள் மண் யாருக்கும் பணியாது. மண்ணை மிதித்தவனை, தாய் நிலத்தை அபகரித்தவனை, சொந்த மண்ணைச் சூறையாட நினைத்தவனை, என்செய்வோம் என நிரூபித்துக் காட்டிய விடுதலைப் புலிகளின் வீரம் விளையாடிய மண்.

இந்த வீரமண்ணை மீட்டெடுத்த வெற்றி ஈழத்தமிழர்களின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மிகப்பெரிய வாகைசூடலாகும்.

சிறிலங்கா இராணுவத்தின் மனநிலையை ஆழமாகப் பாதித்து இனி என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பில் படையைவிட்டு ஓட்டமெடுக்கும் இராணுவத்தினரின் தொகையை அதிகரிக்க வைக்கும் பாரிய வெற்றியை அறிவிக்கின்ற இந்த மீட்டெடுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை உலகுக்கு நிரூபித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

மிகப்பெரிய அளவிலான படையினரையும், சர்வதேச ரீதியாகப் பெற்ற ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு கிளிநொச்சியை முற்றுகையிட்டு முடக்கிய எதிரியைத் தமது நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல் தந்திரோபாயங்களாலும் நன்கு பயிற்றப்பட்ட போராடும் போர்த்திறனாலும் வென்றெடுத்த இந்த வீரர்களின் சாதனை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகின்றது. மேதகு தேசியத் தலைவரின் ஆற்றுப்படுத்தலில் அணிதிரண்ட புலிவீரர்கள் அணியணியாய் புறப்பட்டு ஓயாத அலைகளாய் போராடித் தமது அர்ப்பணிப்புகளால் இந்த வன்னி மண்ணை சுதந்திர பூமியாக்கியுள்ளார்கள்.

பேராண்மை என்ப நுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு

(படைச்செருக்கு 773) என்பது ஒரு குறளாகும்.

பகைவர்களைக் கண்டோடாது (தாட்சண்யம்) கொன்று குவிக்கும் ஒரு வீரன், அப்பகைவனுக்கு போர்க்களச் சூழலில் ஏதாவது ஒன்று நேர்ந்த சந்தர்ப்பத்தில் ஒரு கணமும் தாமதிக்காது தானே உபகாரியாய் மாறுகிறான். இது வீரனுக்குரிய உயர்ந்த பண்பாகும். வீரத்தின் சிகரம் இந்தச் செயல். அந்த வீரனுடைய பேராண்மைத் தன்மைக்குரிய கூர்மை யாக அமையக்கூடிய இச்செயல் போற்றுதற்குரியதாகும் என்பதே மேற் கூறப்பட்ட குறளின் கருத்தாகும்.

இக்குறளின் கருத்துக்கு அமைந்து



வருவதைப் போன்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடானது ஒவ்வொரு படைமுகாம் தகர்ப்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மனிதத்தைக் கொன்று நரபலி கொள்ளும் எதிரி சரணடையும்போது அவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்த சம்பவங்கள் ஏராளமாகவே நடைபெற்றுள்ளன. போரிலே மரணமைந்த அந்நிய இராணுவத்தினரின் உடல்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்து தங்களது மனிதாபிமானப் பண்பையும் பேராண்மையையும் மட்டுமல்ல நாங்கள் ஊராண்மையும் நிறைந்தவர்கள் என்பதையும் தங்களது செய்கையால் நிலைநாட்டியுள்ளார்கள்.

கிளிநொச்சி நகரின் மீட்டெடுப்பின் பின்பும் இத்தகைய ஊராண்மை நிறைந்த கையளிப்பை எங்களது விடுதலை வீரர்கள் செய்து முடித்தார்கள். ஆயிரமாயிரமாய் மரணித்த அந்நிய இராணுவத்தின் உடல்களை எடுத்து ஒப்படைப்பது என்பதே சிரமமான ஒரு பணியாகிலும் மனிதப் பண்பு நிறைந்த இந்த வீரர்கள், வீரனுக்குரிய இயல்போடு இந்தப் பணியையும் நிறைவேற்றி முடித்தார்கள்.

மண்மீட்பு சார்ந்த அத்தனை மகத்துவங்களுக்கும் 'அகரமாய்' நிற்கும் மேதகு தேசியத் தலைவரின் போர்ப்பாசறையில் வளர்ந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள். இதில் ஐயம் ஒன்றுமில்லை. எதிரிக்கும் உயிர் கொடுக்கும் உயர்ந்த வள்ளலாய் நிமிர்ந்து நிற்கும் தலைவரின் செயற்பாடுகளால்தான் இன்று தமிழினமே நிமிர்ந்து நிற்கிறது. எங்களின் தலைவரின் பாதம்பட்ட கிளிநொச்சிப் பாதைகள் இனி எதிரிக்குப் பணியாது.

அடிக்குமேல் அடியென்று அடுத்தடுத்து நடைபெறும் பின்னடைவுகளால் உள்ளுக்குள் உடைந்த பாரிய பல உடைவுகளோடு 'படை' எங்கு நிலைத்திருக்கும். இராணுவத்தினருக்குப் பெரும் தலையிடியாய் இருப்பது நடந்து முடிந்த வரலாற்றுச் சமர் மட்டுமன்று. நாளை எந்த முகாம் என்று தெரியாமல் நிலைதடுமாறி நடுங்கும் இவர்கள் சாவுக்குப் பயந்து ஓயாத இந்த அலையில் மூழ்கிய நடுக்கம் மாறாமல் அந்த ஈர நினைவுகளோடு குளிர்காய்ந்து சுரம் போக்க வழியின்றி குலப்பன் காய்ச்சலோடு வெடியோசையின் அதிர்வுகளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள். வெடியோசையின் அதிர்வலைகள் இவர்களை வந்தடைய முன்பு ஓட்டமெடுக்கும் இவர்கள் பாயும்புலி என்றால்—

மாவீரர்களின் தற்கொடைகளால் எழுதப்படுகின்ற ஈழத்தின் வெற்றிகள் வீரவேங்கைகளின் உறுதியில் நிலை பெறுகின்றன. இந்தக் குருத்துக்கள் தங்களை அழித்து தமிழீழத் தாயகத்தைப் பெற்றுத்தர துணை நிற்கிறார்கள். இந்த மீட்டெடுப்பில் நாங்கள் இழந்த சகோதரர்களை மீளப்பெறமுடியாது. ஆனால், இந்தத் தேசபக்தர்களின் அர்ப்பணிப்புக்கள் இல்லையேல் தமிழீழ இலட்சியத்தை நிறைவு செய்யவும் முடியாது. தங்களை உருக்கி தாயகத்துக்கு ஒளி கொடுக்கத் துடிக்கும் இந்த மாவீரர்களை எங்கள் மண் ஒருபோதும் மறக்காது.

நாங்கள் சொந்தமென வாழ்ந்துவந்த நிலமும் வீடும் வளவும் எல்லாம் எதிரி தனது என்று உரிமைகொண்டாடி எங்களை ஏதிலியாய் அலையவிட்டான். இந்த அலைதலில் வீட்டுக்கு வீடாய், நிலம் மாறி நிலமாய், இடம் விட்டு இடமாய், ஊர் ஊராய் பிரதேசம் பிரதேசமாய் நாடுகடந்து நாடாய் எப்படியெல்லாமோ அலைந்து அலைந்து ஓய்ந்துபோனோம்.

ஓய்ந்துபோய் ஒதுங்க இடமின்றி நாடோடியாகி அலையும் வாழ்வுக்கு வழிதேட — நடைபெற்ற முதல் அடியாகி கிளிநொச்சி நிலம் விடிவு

**இலக்கியா**

பெற்றது. இந்த விடிதல் ஓயாத அலையாகி எதிரி எங்கெங்கு நிலைகொண்டு தனது அதிகாரத்தைக் காட்டுகிறானோ அங்கெல்லாம் உட்புகுந்து அவனை அழிக்கும். அலைக்கு மேல் அலையாய் இது [illegible]. தமிழினத்தை அலையவிட்ட இராணுவத்தினரது அடாவடித்தனங்கள் அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைத்து தமிழீழத் தாயகத்தை சுதந்திர பூமியாக்கத் துடிக்கின்ற புலிவீரர்களின் திட்டமிட்ட தாக்குதலான இந்த ஓயாத அலைகள்—இதன் வெற்றியும் இனித் தொடர இருக்கின்ற அலைகளும் தமிழர்களின் அவலத்தைத் தடுக்கும், தடுத்து நிறுத்தும். மாறாக இந்த ஓயாத அலைகளால் சிங்களப்படை அங்கும் இங்குமாக அலையும் சிறிலங்கா அரசாங்கம் உலக நாடுகளிடம் கையேந்தி அலையும்.

இதனால் அலையும் படையாக — அலையும் அரசாக, சிங்கள ஆட்சி அலைந்து முடிவில் கலையும். அலைந்து அலைந்து படைகள் கலைய, படைப்பலம் குறையும். படைப்பல குறைவால் இராணுவ முகாம்கள் தமிழீழத்தில் இருந்து கலைக்கப்படும். இதனால் தமிழர்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். ❀

# பங்களிப்பு

வாழைத்தோட்டங்களைக் கடந்து உறுமிக்கொண்டு வந்த அந்தப் பேருந்து—

நீர்வேலியைத் தாண்டி கோப்பாயை அண்மித்ததும் தனது வேகத்தைச் சற்றுக் குறைத்துக் கொண்டு வந்து அந்த....

இடத்துக்கு அருகில் வந்ததும் நிற்கிறது.

பேருந்துக்குள் இருந்து கதைத்துக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் திடீரென ஒரு நிசப்தம்.

எல்லோரினதும் முகங்களும் லேசாக அந்த பக்கம் நோக்கித் திரும்புகிறது.

சில கண்கள் குளமாகின்றன.

சிலவற்றில் இருந்து அந்த நீர் வடிந்தோடி வாயோரம் செல்கிறது.

பாடசாலைச் சீருடைகளுக்குள் தமது இதயக் குமுறல்களை மறைத்துக் கொண்டிருந்த அந்த இளம் வட்டுக்களின் கண்கள் சிவக்கின்றன.

'மயானம் அமைதியானது'

இங்கு அதைப் பார்க்கும்போது ஆத்திரம் பொங்குகிறது. அகோரம் வெளிவருகிறது. இதற்குக் காரணம் அந்த இடத்தின் அமைதி கலைக்கப்பட்டு விட்டது.

மாவீரர் வைக்கப்படும் அந்த விதைநிலம் சின்னாபின்னமாக்கப்பட்டு சீர் குலைந்து கிடக்கிறது—

மாவீரர் துயிலும் அந்தச் சமாதிகள் உடைக்கப்பட்டு அதன் தனித்துவம் அழிக்கப்பட்டு விட்டன. மாவீரர் வைக்கப்படும் அந்த மேடை, பார்வையாளர் மண்டபம், பத்திரிகையாளர் தரிப்பிடம், ஒலி–ஒளி அமைப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்தப் பீடங்கள்....

வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளில் கூட எளிதில் காண்பதற்கரியதான வகையில் உருவமைக்கப்பட்ட அந்த இடம் ... உருக்குலைந்து.. இப்படியாகிவிட்டதே.

அந்தக் காவல்தெய்வங்கள் துயிலும் பூங்காவனம் — அன்று அவள் மாவிளக்குப் போட்டு ஒளிவிளக்கேற்றி மலர்மாலைகள் சூட்டி வணங்கிய புனித ஆலயம்.. அந்த தெய்வங்களின் இதயங்கள் இளைப்பாறும் உறைவிடம் இன்று சின்னாபின்னமாக்கப்பட்டு



சீர்குலைந்திருப்பதைப் பார்த்த ராணியின் மனம் நிலைகொள்ள மறுக்கிறது.

அவள் தன்னை மறந்து கத்தினாள்.

"ஐயோ.... யாரடா... அதை அழித்தவங்கள்... பிணம் .. தின்னி.. நாய்கள்."

ராஜா அவளது வாயை அவசர அவசரமாகப் பொத்தினான். அவளது வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளில் சில அவள் கணவனது கைகளுக்குள்ளேயே சங்கமமாகி விட்டது.

ராஜா அந்த இடத்தையே வெறித்துப் பார்க்கிறான். அவர்களுக்கு பின்னால் இருந்த ஒரு பெரியவர் தனது முதுகை முன்புறமாக நீட்டி அவளின் காதுக்குள் முணுமுணுத்தார்.

"புள்ளை... கீழை ஆமிக்காரன்கள் நிக்கிறான்கள். சோதிக்கிறதுக்காக பஸ்சுக்குள் ஏற வாறாங்கள்... மனசை அடக்கிக் கொண்டு பேசாமல் இரு."

ஆமிக்காரரின் சோதனைச் சாவடியைக் கடந்து இராசவீதியினூடாக பேருந்து தொடர்கிறது. முன்னால் இருந்த முதியவர் நன்கு பழுத்த பழம். அந்தப் பெரியவரின் வாயிலிருந்து சில வார்த்தைகள் மெதுவாக வெளிவந்தன.

"கேட்டியே புள்ளை..! எதுவும் எங்கட கையில இருக்கேக்கை அதன் அருமை எங்களுக்குத் தெரியாது. அது எங்கட கையை விட்டுப் போனதுக்குப் பிறகுதான் அதன் அருமையும் தேவையும் எங்களுக்கு புரியும்..."

ராணிக்குப் புரியவில்லை. அவள் மெதுவாக தன் கணவன் பக்கம் தனது கவனத்தைத் திருப்புகிறாள்.

அவனுக்கும் புரிந்தமாதிரி இல்லை.

என்னத்தைச் சொல்லுகிறார் இந்தப் பெரியவர்.

அவனது பார்வையில் வினாத் தொக்கி நிக்க அந்தப் பெரியவரைப் பார்த்தான்.

"அதுதான் புள்ளை... எங்கட புள்ளைகளின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கேக்கை எங்களுக்கு அவைகளின்ர அருமை தெரியவில்லை. மோனை.... இப்ப அவையள் இங்கை இல்லை. ஆமிக்காரன்ரை அட்டகாசம் பெருகேக்கைதான் அவையளின்ர அருமை எங்களுக்குத் தெரியுது."

ராணிக்கு இப்போது புரிந்து விட்டது.

அவள் தனக்கு அடுத்தாற்போல் இருக்கும் அந்தப் பாடசாலைப் பிள்ளைகளைப் பார்க்கிறாள். கண்களில் ஒளியிழந்து, பயந்த சோகப் பார்வைகளுடன் பாடசாலைச் சீருடைக்குள் கூனிக்குறுகி புத்தகங்களால் தங்களை கூடியவரை மறைத்து நிற்கும் அந்த மாணவிகளைப் பார்க்கிறாள்...

'இவர்களைப் போன்ற ஒரு மாணவிதானே அந்தக் கிருசாந்தியும்.. அவைகளின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கேக்கை பாதுகாப்பாக இருந்த அவளும் அவளது கற்பும் இன்று ஆமிக்காரங்களின் கட்டுப்பாட்டுக்கை...'

'பாலேந்தி என்ற ஆறு வயதுச் சிறுமியைக் கூட இந்த ஆமிக்காரங்கள் விட்டு வைக்கேல்லை..'

"புள்ளை... இந்த மாவீரர் மயானத்தை அழிச்சவையளுக்கு இந்த மண்ணில தான் குழி வெட்டியிருக்கு... கிளிநொச்சியோட அவையளுக்குப் புரிஞ்சா சரி..."

பழுத்த அந்தப் பழத்தின் வார்த்தைகள் பஞ்சாமிர்தம்.

அவள் ராஜாவைப் பார்த்து மெல்லியதாகப் புன்னகைத்தாள்.

"அத்தான்... பெரியவரின் சாபம் பலிக்கத்தான் போகிறது..."

ராஜாவின் முகத்தில் கருமை எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ராஜா..." அவள் மெல்லியதாக அவனின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

"ராஜா... என்ன?.. ஆமிக்காரன்களைக் கண்டவுடன் பயந்திட்டியளோ..?"

"சீச்சீ... அதில்லை."

"அப்போ."

"எதிரியின் இறந்த உடம்புக்கே மரியாதை தருகிறவர்கள் புலிகள்.... அதைக்கூட உணராமல் அந்த மாவீரர்களின் துயிலும் இல்லத்தை இப்படி— சீச்சீ... என்ன இருந்தாலும் இது காட்டுமிராண்டித்தனம்."

— உருக்குலைந்த அந்த இடத்தின் கோலம் அவனையும் வாட்டியது.

'இது ராஜாவின் வார்த்தைகளா..' அவளால் நம்பமுடியவில்லை.

பத்து வருடங்களுக்கு முனனதாகவே தாய்நாட்டைவிட்டு ஜெர்மனிக்குப் போய் இப்போ பிறந்த இடத்திற்கு வந்திருந்த அவனின் மனதிலிருந்து வந்த வார்த்தைகளா..! இந்தப் போராட்டத்தைச் சுட்டிக்காட்டி அகதி அந்தஸ்து கேட்டதோட சரி. அவன் விடுதலை உணர்வையோ சுதந்திர தாகத்தையோ எண்ணியும் பாராதவன்.

"அம்மாவின் கடமை செய்யத் தவறக்கூடாதென்று திவசம் மட்டும் வருடாவருடம் செய்விப்பியளே. ...தானே தாய் மண்ணும். ...ல் ஏன் பங்கெடுக்கக் கூடாது" என்று யாராவது கேட்டால் கடவாய்க் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து நழுவிவிடுவான். அவனிடம்தான் இந்த மாற்றமா...

அந்த மாவீரர் இடத்தின் சிதைவுகள் எந்த ஒரு மனிதனின் மனத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் ராஜாவின் மனதில் இவ்வளவு சீக்கிரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை.

ராஜா– ராணி– இந்த இரண்டு பெயர் ஒற்றுமைகளையும் தவிர வேறு எந்த மன ஒற்றுமைகளும் அவர்களிடம் இருக்கவில்லை. மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதும் நாட்டை விட்டு ஜேர்மனிக்குப் போனவள்தான் ராணி. இப்போது தனது கணவனுடன் யாழ்நகர் வந்திருக்கிறாள். அன்று அவள் பார்த்த மாவீரர் துயிலும் இல்லமும், கிட்டண்ணா பூங்காவும் இன்று சிதைக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கும்போது அவளது உள்ளம் கொதிப்பதில் அர்த்தமுண்டு. ஆத்திரப்படுவதில் நியாயமுண்டு.... ஆனால் ராஜா பத்து வருசங்களுக்கு முன் ஜேர்மன் போனவன். அவனது மனதில் எப்படி இந்த மாற்றம்... இந்த மாவீரர் துயிலும் இல்லம் எப்படிக் கட்டப்பட்டிருந்தது என்று அவனுக்கு எப்படித் தெரியும்...?

ஓ... தரிசனம்... ஒளிவீச்சு இவற்றில் கடந்த காலத்தில் இங்கு என்னென்ன நடந்தது என்று பார்த்திருக்கலாம்... ஆனாலும் இவ்வளவு சீக்கிரம் அவனது மனமாற்றம் வரக்காரணம்.

அவளால் அவனது மாற்றத்தை நம்ப முடியவில்லை.

ஜேர்மனியில் அவன் வாழ்ந்த வாழ்க்கையும் அவனது மனோபாவமும் வேறு. அவசரகால நிதி என்று கேட்டு வந்தவர்களையே கதையாலேயே மடக்கிப் போடுவார்.

"தம்பி அவசரகால நிதியோ...? தம்பிக்கு செல்லக்கிளி அம்மான், அப்பாயண்ணை அவையளைத் தெரியுமோ..." என்று தொடங்கி, "...பண்டிதர், விக்ரர் உட்பட கிட்டண்ணா வரையில எல்லாருடனும் இருந்து நல்லாப் பழகினனான். இப்ப கொஞ்சம் வசதியில்லை... அதனால அவசரகால நிதி தரஏலாது" என்று கதையளந்தே ஆக்களை அனுப்பிப் போடுவார்.

'தேனிசை செல்லப்பாவின்ர நிகழ்ச்சிக்கு ரிக்கற் எடுங்கோவன்' என்று கேட்டதற்கு,

"தம்பி, நான் எப்பவோ ரிக்கற் எடுத்திட்டன் கட்டாயம் வருவேன்"

என்று சொல்லிப்போட்டு புனர் வாழ்வுக் கழகத்தின்ரை அதிலை வாபச்சிட்டு பழைய ரிக்கற்றை கொண்டு போனவர்.

அதனால ராஜா அண்ணன் என்றால் ஜேர்மனியில உள்ள அபிப்பிராயமே வேறை. ஆக்களை வைத்து கதைச்சு நாட்டுப் புதினம் விசாரிச்சுப்போட்டு கடைசியிலை காசுக்கஷ்டம் என்று சொல்லி கை விரித்து விடுவார்.

அறவிடமுடியாத கடன் பாக்கிகளை பட்டியல் போட்டுக்காட்டி, 'இதை வாங்கி அரைவாசியை எடுத்துப் போட்டு மிச்சத்தைத் தாங்கோ' என்று சொல்லி ஆட்களை முடக்க விடுவார்.

விடுதலையை விரும்புகிற மாதிரி விதண்டாவாதம் கதைப்பதைவிட, வீரம் கொண்ட பகைவனைச் சந்திப்பது மேல். இப்போது பங்களிப்புக் கேட்டு யாரும் ராஜாண்ணை வீட்டை போகிறதேயில்லை.

அந்த ராஜாவின் மனதில்தானா இந்த மாற்றம்—

ராணி தனது கன்னத்தை தடவிக்கொண்டே, கணவனின் முகத்தைப் பார்க்கிறாள்...

'அப்படி என்ன யோசனை..? ஏன் அவர் மனம் அங்கலாய்க்கிறது'

அவள் அவனிடம் எதையோ கேட்டுவிட முனைந்தாள்.

'சீச்சீ... வேண்டாம். யாழ்ப்பாணத்தில் நிக்கப்போகிறதே இன்னும் இரண்டு நாள்தான்... அதற்குள்ள நான் எதையாவது கேட்டு... முந்தி மாதிரி அவர் என்னை அடிக்க... ஏன் அதுவும் என் அம்மா வீட்டை போகேக்கை... அதுகள் வேற கவலைப்படும். சாச்சா வேண்டாம்!'

அவள் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

பேருந்து திண்ணைவேலிச் சந்தையை வந்தடைந்தது. நீண்டதொரு பெருமூச்சுடன் கீழ இறங்கினான். அங்கும் ஆமிக்காரங்கள்...

"ஏய். பொட்டக் கிடை..."

"சீச்சீ... இந்தச் சனியனுகள்...' அவன் சற்று மெதுவாகத் திட்டிக்கொண்டான்.

"ராணி நீ கிட்ட வா. என்னோட நில்..! வெளிநாட்டில இருந்து வந்தனை என்டு வெருட்டுவானுகள். நான் கதைக்கிறன்."

அவன் அவளை தனக்குக் கிட்டவாக அணைத்தான்.

'என்மீது இவ்வளவு அக்கறையா...' அவளால் நம்பமுடியவில்லை. அவள் மீண்டும் தனது கன்னத்தை தானே தடவிக் கொண்டாள்.

அன்றொரு நாள் நடந்த சம்பவம் அவளிடம் வந்து மோதியது...

"ராணி ரேடியோவில செய்தி கேட்டனியே..! கிளிநொச்சி தோல்வியை மறைக்க மாங்குளத்தில கொடியேத்திப் போட்டினமாம்... சாய்.. இந்தப் பெடியள் ஆனையிறவை அல்லது பலாலியை ஒரு தட்டுத்தட்டினாங்கள் என்டாத்தான் இவையளின்ர கொட்டம் அடங்கும்."

"சும்மாய் வெறுவாய் சப்பாதீங்கோ..! கிளிநொச்சியை மீட்டதுக்கு இவ்வளவு சந்தோசப்படுகிறியளே... அதை மீட்டதில உங்கட பங்கு என்ன..? சும்மா..

தொடர்ச்சி 10 ம் பக்கம்....

# சாவும் சந்ததிக்காய் யாவும் எமக்காய் அர்ப்பணித்த மாவீரர்கள் பணிதொடர்வதே மகத்தான வீரவணக்கம்!

❊ அன்பு சுயநலமற்றது என்பது கதையல்ல
பண்பு மற்றாரை வாழ வைப்பது என்பதும் பொய் யல்ல

❊ அடிதொழுது அடைவதல்ல சுதந்திரம் மண்டியிட்டு மன்றாடிப் பெறுவதல்ல உரிமைகள்

❊ அவர்கள் போராடி உயிர் ஈந்து பெறட்டும் விடுதலையை நாம் பங்களிப்பு ஏதுமின்றி அதை அனுபவிப்போமென்பது மனிதப் பண்பல்ல

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம். தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டு போன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது. அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள். எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

—தமிழீழத் தேசியத் தலைவர்



கண்கண்ட தெய்வங்கள், மண் தந்த மனிதகுல மாணிக்கங்கள், தாம்வாழ பிறரை அழிக்கும் இன்றைய உலகில், பிறர் வாழ— நாம் வாழத் — தம்மையே அர்ப்பணித்த மகத்தான மனிதர்கள். தினம் தினம் எம் உயிர்களை, வாழ்வை, வளத்தை அழித்தே எம் இனத்தை அழிப்பு செய்ய சிங்கள — அந்நிய அரசான சிறிலங்கா, திட்டமிட்டு செயற்படுத்தி வரும் அரசியல் செயற்திட்டத்தினால் நாம் கொண்ட அடிமை நிலை மாற தேசவிடுதலைக்காய்த் தம் தேகம் சிதைத்த தியாகிகள். கைகட்டி வாழ வைத்த சாதியத்தை வேரறுக்க — வாய்பொத்தி வாழ் என்ற பெண்ணடிமைத் தனத்தை உடைத்தெறிய— உள்ளவர் இல்லாதவர் என்ற பேதங்கள் மனித உயர்ச்சிகளுக்கு



தடைபோடும் அமைப்புக்களை சமன்செய்ய— இவை அத்தனையும் தேசவிடுதலையின் பாற்பட்டவைகள்.

முழுமனித விடுதலையை தேச விடுதலையும் தேசவிடுதலையை முழுமனித விடுதலையும் தேடித்தரும் எனப் பொருள் உணர்ந்து களமாடி விடுதலைக்கு வித்தான வேங்கைகள் நம் மாவீரர்கள். அவர்கள் உணர்ச்சியினால் செயற்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் அல்ல. உணர்வுகளால், நம்மை நம் தலைமுறையை, நம் உயிரினும் மேலான தேனினும் இனிய தேசத்தை நெறிப்படுத்திட தம்மையே ஈந்த தேசவிடுதலை வீரர்கள்.

ஆதலால்தான், அந்த மாவீரர்கள் நினைவாக கார்த்திகை 27ம் நாள் தேசமே எழுந்து ஈகச் சுடர் ஏற்றி அந்த மாவீரர்களுக்கு வீரவணக்கம் செய்து நிற்கின்றது. உறுதியின் உறைவிடமாய்த் திகழ்ந்த மாவீரர்கள் துயில் கொள்ளும் மாவீரர் இல்லங்கள் சென்று வணங்கி, அவர் விட்டுச் சென்ற பணிதொடர உறுதி கொள்ளுதல் தமிழீழ மக்கள் பண்பாடாகப் பரிணமித்து நிற்கின்றது. இந்தப் புனித தினத்தை தமிழீழதேசத் தேசிய தினமாக தமிழீழ மக்கள் கொண்டு— தேசத்தையும் அத்தேசத்தை மீட்க சந்ததிக்காய்ச் சாவையும் ஏற்று யாவையும் தமிழீழ மக்களுக்கே அர்ப்பணித்த — மாவீரர்களையும் போற்றி வணங்கி, தேசவிடுதலைக்காய் மாவீரர்கள் விட்டுச் சென்ற பணியில் தம் பங்கைத் தாமே தேடி ஏற்று செயற்பட ஆயத்தமாகின்றனர்.

அன்பு சுயநலமற்றது என்பது கதையல்ல. பண்பு மற்றாரை வாழவைப்பது என்பதும் பொய்யல்ல—புனைந்துரையல்ல என அடக்குமுறைக்கு எதிராய்க் கிளர்ந்தெழுந்த மாவீரர் துயிலகங்கள் புதிய தமிழ்க் கலாச்சாரத்தின் அடித்தளங்கள். அடிதொழுதுப் பெறுவது சுதந்திரமல்ல. மடிப்பிச்சையல்ல உரிமை மன்றாடிப் பெறுவதற்கு. நம் உரிமை நமது. அதை நிலைநாட்ட வேண்டியது நம் செயலால். கருதியும் இனிக் கெஞ்சிக் கிடக்க மாட்டோம். இருந்தும் இனி நம் மண்ணில் அடிமை இல்லை. நமது நாட்டை மீளவும் நம்முடைமையாக்குவோம் எனத் தமிழீழத் தேசத்தின் விடுதலைச் சக்திப் புனலாக பெருக்கெடுத்தவர்களின் தேக்க பூமி மாவீரர் துயிலகங்கள். அங்கு விடுதலையின் வித்தாக விதைக்கப்பட்டுக் கிடக்கும் ஒவ்வொரு மாவீரர் திரு உடலும் ஆயிரம் ஆயிரம் விடுதலை நெஞ்சங்களை பிறப்பிக்கும் சக்திக் கருவூலங்கள்.

இதனால்தான், ஆக்கிரமிப்புச் சிங்களப் படையினர் தமிழர் கலாச்சாரத்தையும் தமிழர் விடுதலை உணர்வையும் ===>

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive